உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | பிரமாதீச - மாசி - 10—3—74 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## வாழ்வு வளம் பெற....

### ஏன் இந்த அவல நிலை :

இப்போது உலகில் எங்கும் ஒரு அலைவு. அமைதியின்மை சஞ்சலம், பற்றுக்குறைகள், தட்டுப்பாடுகள், முட்டுப்பாடுகள், அந்தந்த நாட்டில் மனிதர்களுக்குள், அரசியல் கட்சிகளுக்குள், நாட்டுக்கு நாடு. சண்டைகள், சச்சரவுகள், மாற்சரியங்கள் மிகுந்து காணப்படுகின்றன. உலகிலே மிக வளர்ந்துள்ள நாட்டிலும், வளர்ந்து வரும் நாட்டிலும், வளரவேண்டிய நாட்டிலும் ஆக எல்லாத்தரத்ததான நாடுகளிலும் இதே நிலை. மனிதனை மனிதன் நம்பவில்லை. தானே பெரியவனாக இருக்க வேண்டும் தனக்கு மேலான ஒருவன் இருத்தல் கூடாது. தனது கட்சியே ஆளவேண்டும்; மற்றக்கட்சிகள் அழிந்து ஒழிய வேண்டும். தன் கொள்கையே பரவவேண்டும்; வளரவேண்டும்; தனக்கு மாறான கொள்கை எதுவும் பரவக்கூடாது; வளரக் கூடாது என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. உலகம் உய்ய வேண்டுமேயானால் தான் சொல்லும் வழியல்லாத வேறெந்த வழியிலும் உய்வுகிடையாது; கிடைக்காது என்றே வலியுறுத்தி வருகின்றனர். இந்தச் சமயத்தில் - இந்தப்

பூசலில், நல்லவர்கள், கற்றவர்கள், வகைதெரிந்து நடத்தக்கூடியவர்கள் தாங்கள் எண்ணிக்கையில் குறைவாகவுள்ள காரணத்தாலோ, வேறெதனாலோ - தம் சொல், தம் அறவுரை ஏற்கப்படாது, மேலோங்காது என்று அஞ்சியோ ஒதுங்கி நிற்கிறார்கள். ஏன் இந்த அவலநிலை. இதை எவ்விதம் அடக்கலாம் என்று சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

## இரத்தத்தின் இருவகை ஆற்றல்கள் :

மனிதனுக்குள் இரு வேறு சக்திகள் அடங்கியிருக்கின்றன என்பதை உலக அறிஞர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று தெய்வநெறி (அறநெறி); மற்றது அசுரநெறி (மறநெறி). இந்த இரண்டும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டது. இந்த இரு சக்திகளும் நாளும் தம்முள் போராடிக்கொண்டே இருக்கின்றன. அதாவது உடலியல் நிலையில் வைத்துச் சிந்திப்பது ஓரளவு விளங்கக்கூடியதாக இருக்கும். நம் உடப்பிலே மனிதஇனம் உற்பத்திக்காலம் தொடங்கி, மறையும் வரையிலும் தடைப்படாது ஓடிக்கொண்டே இருக்கவேண்டியது, இயங்கிக்கொண்டே இருக்க வேண்டியது என்றபல சக்திகள் இறைவனால் உண்டாக்கப்பட்டு அவன் ஆணையின் வழியே இயங்கிக்கொண்டே இருக்கின்றன. அதிலே மிகமுக்கியமானது இரத்த ஓட்டம். இரத்தம் என்பது வெள்ளணு செவ்வணுக்கள் கலந்த ஒன்று. இந்த இரத்த ஓட்டம் நல்ல முறையில் நல்ல இரத்தமாக, வேண்டிய அளவில் மிகாமலும், குறையாமலும், ஒருவரையறைசெய்யப் பட்ட வேகத்தில் ஓடிக்கொண்டே இருத்தல் வேண்டும். அதில் எவ்வித மாறுபாடும் நிகழக்கூடாது. மாறுபாடு உண்டானால் அந்தக்காலத்தை நோய்வாய்ப்பட்ட காலம் என்போம். "நோய்வராமல் இருப்பதற்கு இந்த இரத்த ஓட்டம் மேலே சொல்லியவாறு செம்மையாக இயங்கவேண்டியதாக இருக்கிறது; காக்கப்படவேண்டியதாகவும் இருக்கிறது. அந்த இயக்கத்தில் ஓடவேண்டிய இரத்தம் தூயதாக இருத்தல் வேண்டியிருக்கும்.

## அறத்திற்கும் மறத்திற்கும் போர் :

இதில் நம்மைக்காக்க இந்த செவ்வணுக்கள் எப்போதும் விழிப்புடன் ஓடி ஓடிப் பணியாற்றிவருகின்றன. அவை வலுக்குறையாமல் இருத்தல் வேண்டும். அதற்காகவே உடல் நலத்துக்கேற்றதாக உணவு இருத்தல் வேண்டும் என்போம். இந்தப் போரில் சிவப்பு அணுக்களை ஆற்றல் மிக்கதாகக் காத்து வரவேண்டியது நம் கடமை. அதில் குறைபாடுகள் வருங்காலத்தில் நோய்க்கிருமிகள்மிகுந்து இரத்த ஓட்டத்தில்-அதன் தன்மையில் கேடு உண்டாகி உடல் நலம் கெட்டுப்போய்விடுகிறது.

இது எக்காரணத்தினுல் நிகழ்ந்ததென்பதைக்கண்டு அதற்குஉற்றதைச் செய்வதே மருத்துவம். இதனுல்தான் இந்த மருத்துவம் செய் முறையை மருத்துவ உதவிகள் (medical aid) என்றழைக்கிருேம். இதுவேதான் மனிதனுக்குள் மன நிலையிலும் எப்பொழுதும் எந்நேரமும் நிகழ்ந்துவருகிறது. அதாவது மனிதனுக்குள் இருக்கும் அறநெறி ஆற்றலுக்கும் மறநெறி ஆற்றலுக்கும் பெரும் போர் - உட்போர் நிகழ்கிறது. இயற்கையில் நல்ல மனம் படைத்த ஒரு பிறவியாக மனிதனைப் படைத்திருப்பதனுலேயே மனிதன் – மனம் படைத்தவன் என்று மற்ற உயிர்ப் பிறவிகளிலிருந்து பிரித்து அழைக்கப்படுகிருன் என்பர் அறிஞர். அந்த மனம் நல்லதாக - அறப்பண்புகளில் ஊறியதாக – அதிலே நிலைத்துநிற்பதாக எதுவரை இருக்கிறதோ, அதுவரை மனிதனுக்கு மனிதன் அறவுணர்வின் அடிப்படையில், அறப்பண்புகள் வளரப்பெற்று உலகில் உள்ள அனைத்தையும் தன்னுடன் பிறந்ததாக - இறைவனுல் தன்னைப்போலவே உண்டாக்கப்பட்டதாகக் கருதி ஒருமைப்பாட்டுணர்வு பெற்று வளர்ச்சிப் பாதையில் தன் மனத்தைச் செலுத்தி அன்பின் அடிப்படையில் உயர முற்படுவான். வெற்றியும் காண்பான். அதே மனிதனுடைய மனம் மற நெறியில் மிகுந்துவிட்டால் இப்போது நிகழ்ந்துவரும் எல்லாக் குறைபாடுகளும் உலகிலே நிகழ்ந்துவரும். இது போன்ற தீமைகள் மிகுந்த காலங்களில் நம்மில் – அதாவது மனிதர்களில் உயர்ந்தோராகிய அறநெறி ஆசான்கள் நம்மிடையே தோன்றி உலகைத் திருத்திவருகிருர்கள். இந்த உண்மையை உலக நாடுகளில் நிகழ்ந்த பலவற்றின்வாயிலாகவும், சரித்திரங்கள் வாயிலாகவும். புராணங்கள், பெரியோர்கள் வாழ்க்கை வரலாறுகள் வழியாகவும் நாம் தெரிந்துகொண்டு வருகிருேம்.

### இறையாற்றல் :

இப்போது மனிதனுக்குள் உள்ள அசுர சக்திகள் மேலோங்கி வளர்ந்து வருவதாலேயே எல்லாக் குறைபாடுகளும் மிகுந்து மேலோங்கி உலகமுழுவதிலும் அமைதியின்மையும் மற்ற இன்மைகளும் வளர்ந்திருக்கின்றன. நமது புராணங்களில் சொல்லியிருப்பதுபோல் எப்பொழுதெல்லாம் அசுர சக்தி மேலோங்கி மனித சக்தி பலவீனமாக்கப்பட்டதோ; அதாவது அந்த அசுர சக்தியை அடக்கி ஆளும் ஆற்றல் மனிதனுக்கு இல்லாமல் போகிறதோ- அப்பொழுதெல்லாம் இந்த உயிர் ஆற்றலுக்கு மேலாக இந்த நோயைக் குணப்படுத்தக் கூடிய மருத்துவனுகிய இறைவனது ஆற்றலை மிகவும் வேண்டிப் பெற்று நோய் நீக்கம்பெற வேண்டியுள்ளது. எப்பொழுதெல்லாம் அசுரர்கள் ஆற்றல் மிகுந்திருந்து மற்றவர்களுக்கு -

நல்லவர்களுக்குத் தீமை விளைத்துவந்தார்களோ அப்பொழுதெல்லாம் அறவோர் இறைவனை நோக்கி, தமக்குற்ற குறை போக்க வேண்டிக்கொண்டார்கள். இறைவனும் ஏதோ ஒரு காரண உருவத்தில் வந்து அந்தப் பெருந்துன்பத்தைப்போக்கி உலகில் தீமையைக் காய்ந்து நன்மையை மீண்டும் நிலை நாட்டினன் என்ற வரலாறுகள்தாம் நமது புராணங்கள். இவ் வரலாறுகள் நமது பாரத தேசத்திலுள்ள சைவ வைணவ சமயத்தார், பௌத்த சமண சமயத்தார் என்றில்லாமல், உலகில் உள்ள கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய பிற எல்லா மதங் களையும் தழுவுவோரால் நம்பப்பட்டுப் பலப்பலவாக எழுதப் பட்டிருக்கின்றன. அநாகரிகர்கள் என்று கருதப்படும் காட்டு மிராண்டிகளுக்குள்கூட இவைபோன்ற தெய்விகப் புராண வரலாறுகள் பேசப்படுகின்றன என்பதையும் காணலாம். மனித இனம் எங்கெங்கிருந்தாலும் அங்கங்கும் உள்ள பொதுமையான கருத்து ஒன்றுதான். ஆகவே இப்போதுள்ள நமதுகாலத்தில் நிகழ்ந்துவரும் துன்பங்களை வெறும் மனித ஆற்றல் ஒன்று கொண்டுமட்டும் அடக்கிவிடலாம் என்று சொல்லுவது இயலாதுபோலத் தெரிகிறது. இந்த நோய்க்குற்ற மருந்து வனுகிய, ஆற்றலில் மனித ஆற்றலுக்கு மேற்பட்ட ஆற்றலாகிய இறையாற்றலை, அந்த இறைவனை வேண்டித் தவம் இருத்தலே செய்யுத்தக்கது.

## நமது குறிக்கோள் :

தவம் என்ற உடனே உடலை வெறுத்து உலகை வெறுத்துக் காட்டுக்குப் போவதென்று கொள்ள வேண்டியதில்லை அவரவர் இருக்கும் இடங்களிலே அவரவர் கொண்ட கொள்கையின் வழியே, இயன்ற அளவு இறைவனைச் சிந்தித்து வழிபட்டு, ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வேண்டி அர்ச்சனைகள், வழிபாடுகள் நிகழ்த்துதல் வேண்டும். தனியாகச் செய்வதைவிட; தம்மோடு உடன் சேரக்கூடியவர்களையும் கூட்டிச் சென்று, கூட்டு வழிபாடுகளாகச் செய்து தானும் தன்சமூகமும் எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணத்தைக்கொண்டு நடத்துதல் பொருந்தும். தனிப்பட்டவர்கள் மட்டும் வாழவேண்டுமென்று பிரார்த்திப்பது சிறப்பாகாது. எதுவந்தாலும் அந்த நன்மைகள் அத்தனையும் நம்மவர்கள் எல்லோருக்கும் பொதுவாகவே பகிர்ந்து மகிழ வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். இப் பகிர்வு முறையைத்தான் நம் பெரியோர்கள் நமக்கு வற்புறுத்தி இருக்கிருர்கள். காகம் இரை கண்டதும் தன்னினத்தைக் கரைந்து அழைத்துக் கூடி-தான் கண்ட இன்பத்தைப் பகிர்ந்து

கொள்வதுபோல மனித இனமும் செய்தல்வேண்டும் என்பதே நமது கொள்கை. ஆகவேதான் 'உலகம் வாழவேண்டும் நம் நாடு வாழவேண்டும் என்று பிரார்த்தனை செய்தல் வேண்டும்' என்று வற்புறுத்தவேண்டியிருக்கிறது. "தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். பிரார்த்தனையால் அனைத்து நலங்களையும் அடையலாம் என்பதை விஞ்ஞானி களும் உடன்பட்டுள்ளனர்.

## இறைவன் உறையும் ஆலயங்கள் :

பசுவிலிருந்து நாம் பெறும் பாலென்பது அதன் உடம்பில் ஓடும் ரத்தத்தில் சத்துப் பொருள்தான் என்றாலும், அந்தப் பாலைப் பெறுவதற்கு அதன் உடலுறுப்பில் "மடி" என்ற அமைப்பின் வழியேதான் பெறலாகும் மற்றப் பகுதிகளினால் அங்கிருந்து வெளிப்படுவது ரத்தமாகவே இருக்கும். அது நமது குறிக்கோளடைவதற்கு - அதாவது பாலைப் பெறுவதற்கு ஒப்பாகாது. மேலும் அது அப்பிராணிக்குத் தீங்கு செய்வ தாக ஆகும். அதுபோல இறைவன், நாம் காணும் ஒவ்வொன் றிலும் விரவி நிற்பவனாக இருந்தாலும், அவன் ஆற்றலைக் காண்பதற்கு ஓரிடம் வேண்டும். அந்த இடத்தையே இறைவன் உறையும் ஆலயங்கள் என்று போற்றி வந்தனர் நம் பெரியோர். அங்கு அந்த இறையாற்றலை - அதன் கூறுகளை அமைத்து வழி பட்டார்கள். அவ்வாற்றலை வெவ்வேறு பெயரிட்டு வழிபட்டனர். உலகில்மற ஆற்றல்கள் வெவ்வேறு ஆற்றலுடையனவாக வெவ் வேறு உருவில் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். ஒவ்வொன் றையும் அடக்குவதற்கு அதற்கு மாறுபட்ட அறநெறி ஆற்றலாக வெளிப்பட்டு அத்தீய சக்தியை அடக்கி அறநெறி ஆற்றலை மிகுதிப்படுத்தி நம்மைக்காப்பாற்றும், அந்தந்த ஆற்றலுக்கும் வெவ்வேறு உருவங்களும், செய்கைகளும் வெவ்வேறாகக் கொள்ளப்படுகின்றன. மனித நாகரிகம் தோன்றிய காலந் தொட்டே இவை நிகழ்ந்துகொண்டே வருகின்றன. அதே நிலையில்தான் இப்போதும் நிகழ்ந்து வருகிறதெனலாம். ஆகவே அப்பொழுது அதற்கு மாற்றாக இருந்த அந்த அற நெறிச் சக்திகளை இறையருள் திருவுருவங்களில் வழிபடுவதால் நாம் விரும்பும் பயனைப்பெறலாம்.

## அறம் குறைந்து மறம் வளர்ந்தால் :

"எப்பொழுதெல்லாம் உலகில் தீமை பெருகுமோ அப்பொழு தெல்லாம் நான் வந்து அவதரிப்பேன்" என்று கண்ணன் பகவத் கீதையிலே கூறினான். சைவ வழியில் மற ஆற்றலை

அடக்கியாள்வதற்காக உலகில் தோன்றி வெளிப்பட்ட ஆற்றல்களைப் பெருமானது வீர நிகழ்ச்சிகளாகக் கொண்டு அந்த வரலாறுகள் நிகழ்ந்த தலங்களை அட்ட வீரட்டத் தலங்கள் என்றும், தேவி, அசுர ஆற்றல்களை அடக்கி ஆண்டருளிய இடங்களை சக்தித்தலங்களாகவும், முருகன் அவ்வாற்றலை வெளிப்படுத்திய இடங்களை ஆறுபடை வீடுகள் எனவும் வைணவர்களும் நரசிம்மம் முதலிய மூர்த்திகள் அவ்வசுர ஆற்றலை அடக்கிய இடங்களைச் சிறப்புத் தலங்களாக்வும் கொண்டு தம்குறைகளைப் போக்கிக்கொள்ள இன்றும் மக்கள் அங்கங்குங்கூடி வழிபட்டுப் பயன்பெற்று வருகின்றனர். தனிப்பட்ட நிலையில் அச்சிறப்புக்கள் பற்றி நாம் அறிந்தவொன்றை விளக்கிச் சொல்லுதல் மிகையாகும்.

## ஊழையும் உப்பக்கம் காணலாம் :

அந்த ஆற்றல் மிகுந்த இடங்களில் மேலே சொல்லிய வண்ணம் உலக நன்மைகள் கருதி இப்போது அர்ச்சனைகளாகவும், அபிஷேக ஆராதனைகளாகவும் உலகம் ஒரு நிலைப்படும் அளவுக்கு வழிபாடுகள் செய்தல்வேண்டும். “வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்” என்று சொல்லிவிட்டால் அல்லது அந்தப் பாடலை ஒருமுறையோ பல முறையோ சொல்லி விட்டாலே பயன் பெற்று விடலாம் என்று அந்த அளவில் நிற்பதால் பயன் இல்லை. அதனைப் பெறுவதற்குள்ள தகுதியை நாம் பெற்றவர்களாக ஆகவேண்டும். அதற்காக உழைத்திடல் வேண்டும். உழைப்பும் ஊக்கமும் இருந்தால் ஊழையும் உப்பக்கம் காணலாம் என்பது நமது மறைமொழி தரும் விளக்கமாகும். உழைப்புக்குத் தகுந்த கூலியே கிடைக்கும் என்பதையும் நாம் அறிவோம்.

## விரும்பும் பயன் பெற :

ஆகவே உறுதியும் உழைப்பும் ஊக்கமும் கொண்டு அதிலே அசையாத நம்பிக்கைகொண்டு எந்த எதிர்ப்பு வந்தாலும் அதனை எதிர்த்து வெற்றிகொள்ளும் மனப் பண்பும் அலைவில்லாத மன உரமும் கொண்டு உழைத்தால்தான் இந்த அறவழியிலேயும் உலகியல் நெறியிலேயும் நாம் விரும்பும் பயனை அடைதல் எளிதாகும். எனவே நாட்டு நலத்தில் நாட்டம்கொண்ட நல்லவர் அனைவரும் நன்றே உடையனாய், தீதே இல்லாதவனும் உள்ள இறைவனை வழிபட்டு மக்கட்கு நல்ல எண்ணமும் நல்லறிவும் நற்செயலும் நாளும் வளரப் பிரார்த்திப்போமாக.

வளர்க இறை நெறி! வாழ்க உலகெலாம்!!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மல்லியக்கொல்லை

## பாலாஜி பேப்பர் போர்ட்ஸ் (பி) லிட்.,க்கு

9—12—1973 ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டி

வழங்கியருளிய

# ஆசியுரை

" தனந்தரும்; கல்விதரும்; ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும்; தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும்; நல்லன எல்லாந்தரும்; அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே "

### ஏற்றத்தாழ்வுகள் ஏன் ?

இந்தியா மிகப்பெரியநாடு; அதே நேரத்தில் ஏழ்மை நிறைந்த நாடாகவும் இருக்கிறது. இங்கே ஏழ்மை நிலவக் காரணம் என்ன ? சில நாடுகள் செல்வம் கொழிப்பதுஏன் ? என்றெல்லாம் நாம் சிந்திக்கவேண்டும். மனிதர்களில் சிலர் செல்வராகவும் - சிலர் ஏழைகளாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன ? இதனைச் சிந்தித்தாலே நாட்டின் நிலைமை நன்கு புரியும். முயற்சியும் - உழைப்பும் திறமையும் உடையவன் செல்வம் பெறுகிறான். முயற்சியின்மையும், திறமையின்மையும், சோம்பலுண்மையும் உடையவன் ஏழ்மையில் வாடுகின்றான். இதுபெரும்பான்மை. சிறுபான்மை இந்நிலைக்கு விதிவிலக்காக இருப்பதைக் காணலாம். அதனை மேற்கோளாகக் காட்டுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்றதாகாது. உழைத்தவர்கள் உயர்வதையும் - உழைக்காதவர்கள் தாழ்வதையும் உலகியலில் காண்கின்றோம். செல்வமும் என்றும் ஒரே இடத்தில் நிலை பெற்றிருப்பதில்லை. செல்வம்,

" சகடக்கால் போல வரும் "

" ஆறிடு மேடும் மடுவும் போலாம் "

என்பன ஆன்றோர் வாக்குக்கள்.

## வளர்ச்சிக்கு வழி :

தனி மனித முயற்சிக்குத் தக்கபடி அவன் வாழ்வு வளம் பெறுவதுபோல – ஒரு சமுதாயத்தின் உழைப்பு - தன்னம்பிக்கை இவற்றின் அளவிற்கேற்ப நாடும் முன்னேற்றமடையும். நாமும் பல முயற்சிகளில் ஈடுபடுகிறோம். ஆனால் முயற்சி சரியாகத் திட்டமிடப்படுவதில்லை. நல்ல துணிவும் – நல்ல செயலும் முறையான வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதில் ஐயம் இல்லை. தமது சக்தியையும் - தாம் மேற்கொள்ளும் முயற்சியின் அளவினையும் சீர்தூக்கித் துணிந்தபின் ஒரு காரியத்தில் ஈடுபடுதல் வேண்டும். இவ்வறிவு இல்லையென்றால் முயற்சி வெற்றி பெறாது. இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார்.

" உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர் "

என்ற குறட் கருத்தைச் சீர்தூக்கி முயற்சிகளில் இறங்க வேண்டும். எதிலும் நிறை நெஞ்சம் வேண்டும். அவசரம் கூடாது. இத்தகு நெஞ்சுடைய மக்கள் வாழும் நாடு வளரும்.

## எது நல்ல நாடு ?

வல்லவர்களாக நாம் இருப்பதோடு - நல்லவர்களாகவும் திகழ்தல் வேண்டும்; எந்தநாடு சிறந்தது என்ற கேள்விக்குப் புறநானூற்றில் ஔவையார் ஒரு விடை கூறுகின்றார். அது மேட்டு நிலமாக இருக்கலாம் - பள்ளமாக இருக்கலாம்; அல்லது காடாக இருக்கலாம் - நாடாக இருக்கலாம். இவற்றால் ஒரு நாட்டை நல்லநாடு என்று தீர்மானிப்பது இயலாது; எங்கே முயற்சிக்கு உரிய ஆடவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ, அங்கேதான் நாடும் நல்ல சிறப்புடையதாகும் என்பது அப்பாட்டின் கருத்தாகும்.

" நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே "

என்ற பாட்டை நாம் சிந்திக்க வேண்டும். நாமும் நல்லவர்களாக இருக்கவேண்டும். நம் பக்கத்திலும் பலர் நல்லவர்களாக இருக்கத்தூண்டவேண்டும். திறன், உழைப்பு, ஊக்கம், நல்லதைச் செய்யும் நாட்டம், உடையவர்களாக மக்கள் இருந்தால் அப்பகுதி வாழும். நமது வல்லமைகளால் நம் நாட்டுக்கு உலகில் சிறப்பில்லை. நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் பெற்று வளர்த்த பெருமைக்குரிய நாடு நம் நாடு. சமீப காலத்தில் கூட காந்தியடிகளைப்போன்ற நல்லவர்களைப் பெற்று வளர்த்துத்தந்த பெருமை நமது நாட்டுக்கு உண்டு. 'நம் ஊரின் பெருமையால் நமக்குப் பெருமை என்ற நிலை மாறி, நம்மால் - நாம் வாழும் பகுதிக்குப் பெருமை' என்ற நிலை வரவேண்டும். நம்மைப் பொறுத்த வரை, ஆதீனத்தால் நாம் சிறப்படைவதை விட, நம்மால் ஆதீனத்திற்குப் பெருமை சேர்க்க முடியுமா என்ற எண்ணங் கொள்வதே சிறந்தது.

> " நல்லது செய்தல் ஆற்றிராயினும்,
> அல்லது செய்தல் ஓம்புமின் "

என்ற புறநானூற்றுப் பாடற்கருத்தை உணர்ந்து தாம் தொடர்பு கொண்டிருக்கும் நிறுவனத்திற்கோ, சமுதாயத்திற்கோ, தன்னைப் பெற்று வளர்த்த நாட்டிற்கோ சிறுமையைத் தேடித்தாராது பெருமையைத் தேடித்தர முயலவேண்டும். அதுபோல இவ் வட்டாரத்து மக்கள் நன்முயற்சிகளில் ஈடுபட்டுத் தாம் வாழும் பகுதிக்குச் சிறப்புச் சேர்க்கவேண்டும்.

### உழைப்பும்-உரிமையும் :

நாம் முயன்று உழைக்கவேண்டும். அதே நேரத்தில் மற்றவர்கள் முயற்சிக்கும் ஒத்துழைப்புத் தருதல் வேண்டும். மற்றவர்களுக்கு உழைப்பை நல்கி உரிய பங்கினையும் - பெருமையையும் நாம் பெறலாம். நமது உடம்பில் உள்ள உறுப்புக்கள் கூட தத்தம் உழைப்புக்குத்தகச் சிறப்பிக்கப்படுதலை உற்று நோக்கினால் அறியலாம். கை, கால் முதலிய அனைத்து உறுப்புக்களும் அவை அவையும் உழைத்துத் தம் தம் பணிகளைச் செய்து சிறப்புறுகின்றன. அதேபோல இந்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தம்மால் இயன்ற உழைப்பை ஈந்து பெருமை தேடித்தரவேண்டும். உடலுழைப்பும் வேண்டும் - அறிவு உழைப்பு (மூளை உழைப்பு)ம் வேண்டும். இரண்டும் இணைந்தால்தான் உயரலாம்.

**சமுதாயச் சுழற்சி :**

இந்த பாலாஜி அட்டைத் தொழிற்சாலை வைத்தியநாதப் பெருமானுக்கு உரிய இந்நிலத்தில் தொடங்கப்பெறுகிறது. இந்நேரத்தில் இறைவனருளைக் கருத்தில் கொள்ளவேண்டும். இறைவனோடு இதற்குத் தொடர்பு உண்டு. உலகத்தில் சும்மா இருந்து உண்டுவளர இறைவன் யாரையும் படைக்க வில்லை. உழைத்து உண்ணவே கைகால் முதலிய உறுப்புக்களை ஈந்து-அவற்றிற்கு ஆற்றல்களையும் வழங்கியுள்ளான். நம்மால் செயல்பட இயலாத பருவத்தில் இறைவன் பூரணமாக உதவு கிறான். குழந்தை தாய் வயிற்றில் இருக்கும்போது உணவு ஊட்டுகின்றான். குழந்தை பிறந்தவுடன் தாய் மடியில் பால் சுரக்கிறதே அதுவும் இயற்கை நியதியாக இறைவனால் ஆக்கப் பட்டதே. சிறு குழந்தையாக இருக்கும்போது அதன் தேவை களை எல்லாம் தாய் நிறைவேற்றுகிறாள். வளர்ந்தபிறகு அதன் பருவத்திற்கு ஏற்ப அக்குழந்தையிடமிருந்தே சிறு சிறு வேலை களை வாங்கிக்கொண்டுதான் உணவூட்டுகிறாள். இதுபோல நம்மால் இயலாதபோது பிறர் உதவிகளைப்பெற வேண்டும் என்ற எண்ணமும், வளர்ந்து உரம்பெற்றபின் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் வளரவேண்டும்.

**செல்வர்கள் கடமை :**

செல்வர்கள் தொழிலில் ஈடுபட்டே செல்வத்தைப் பெருக்க வேண்டும். வட்டிக்குவிட்டுப் பொருள் ஈட்டுவது தொழில் துறைப் பயிற்சி இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்குமே உரியதாகும். செல்வர்கள் தொழிலில் ஈடுபடுவதால் தொழில் நிறுவனம் இருக்கும் இடத்தைச் சேர்ந்த குடிமக்களும் பக்கத்து ஊர்களில் உள்ள குடிமக்களும் பயனடைவார்கள். தொழில் வளர்ச்சி சிறந்திருக்குமானால் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கும். குடிமக்களும் செல்வ வளம் பெறலாம். தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக வேலை நிறுத்தம் முதலியவற்றில் தொழிலாளர்கள் ஈடுபட்டால் தொழில் துறை பாதிக்கப்படுவதோடு தொழிலாளர்களுமே பாதிக்கப்படு வார்கள். ஆகவே தொழிலாளர்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவி தாங்களும் பயனடைய வேண்டும்.

**முதலாளி தொழிலாளி பேதம் நீங்க :**

முதலாளி தன் கடமை உணர்ந்து தொழிலாளிகளுக்குத் தேவையான-உழைப்பிற்கேற்ற வசதிகளைச் செய்துதரல் வேண் டும். அதேபோல தொழிலாளியும் நிறுவனத்தின் வளர்ச்சியில் நாட்டம் உடையவர்களாய் ஊதியத்திற்குரிய உழைப்பை நல்கி

நிறுவனத்திற்கு நஷ்டம் வராமல் பாதுகாக்கவேண்டும். இந்த எண்ணம் மக்களிடையே செழிக்குமானால் முதலாளி - தொழிலாளி என்ற பேதம் நீங்கி அமைதியான வளர்ச்சி உண்டாகும். நிறுவனத்திற்குத் தீங்கு வருமானால் தொழிலாளி உயிர்கொடுத்தும் காக்க முற்படவேண்டும்.

" தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே "

என்ற அப்பர் வாக்கிற்கிணங்க இருவரும் கடமையை உணர்ந்து செயல்பட்டால் முதலாளி தொழிலாளி போராட்டத்திற்கே வழி யேற்படாது.

## இருவகை உழைப்பு :

இந்திய நாட்டின் நிலம் நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தம். உழைப்பும் - திறனும் உடையவர்களிடம் அது உள்ளது. நிலமுடையவர்கள் தம்மை அண்டி வாழும் வறுமை உடையவர்களை, சவலைப் பிள்ளைகள் போலக் கருதிப் பாதுகாக்க வேண்டும். உழைப்பு இருவகைப்படும். அறிவால் உழைப்பது ஒன்று. உடலால் உழைப்பது ஒன்று. உடல் உழைப்புக்கு ஓய்வு உண்டு. அறிவு உழைப்புக்கு ஓய்வு இல்லை. அறிவு உழைப்பு நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையானதென்பதனால் தான் அதற்கு அதிக ஊதியமும் சிறப்பும் தரப்படுகிறது. இந்த உண்மையைப் பாமர மக்கள் புரிந்துகொள்வதற்கு நாம் உதவுதல் வேண்டும். விரைந்து செல்லும் வாகனங்களை மூளை உழைப்புடையவர்கள் பயன் படுத்துகிறார்கள். அது ஆடம்பரங்கருதியதல்ல. அவ்வாகனங்களால் சேமிக்கப்படும் கால அளவுகளை மேலும் பயனுள்ளதாக்கவே இவைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் சாதாரண மக்களுக்கு விளங்குவதில்லை. இதனால் பேத உணர்ச்சி வளர்கிறது.

## உழைப்பில் நம்பிக்கை :

இன்றையதினம் இத் தொழிற்சாலையை இவ்விடத்தில் தொடங்குவதற்காக நம் அன்பர் நடராசனும் - அவரது சகாக்களும் நம்மிடம் வந்தார்கள். உழைப்பில் நம்பிக்கைவைத்து அவர்கள் இவ்விடத்தை வேண்டினர். நாமும் இவ்வீடத்தை நல்வழியில் பயன் படுத்த நினைத்தோம். அவர்கள் இதனைப்பெற்று இன்று பயன் படுத்திக்கொள்கின்றனர் நமக்கும்- அவர்களுக்கும் இதனால் பயன் விளைகிறது. நம்மை இந்நிலத்தை வழங்கியதற்காகப் பாராட்டினார்கள். பாராட்டு நமக்கல்ல. நடராஜனுக்கும் - அவரது சகாக்களுக்கும் - அவர்களது உழைப்புத் திறனுக்குமே யாகும். திருக்கோயில் வளர்ச்சிக்கு நாம் அனைவரும் உழைக்க

வேண்டும். அவ்வகையில் இவர்கள் உழைப்புப் போற்றத்தக்க தாகும். எல்லார்க்கும் இது பெருமை தருவதாகும். அவர்கள் செயலாற்றலால் இதனைச் சிறக்கச் செய்வார்கள்.

**முயற்சி வழியில் மூவர் :**

நம் அன்பர் நடராஜன் முதலிய மூவர் இதற்கு டைரக்டர்களாக அமைந்துள்ளனர். இது ஒரு சிறப்பாகும். உலக இயக்கமே மூவரால்தான் நடைபெறுகிறது. ஒடுக்குபவராகிய உருத்திரரே முதல்வர். கலகங்கள் முதலியவற்றை ஒடுக்கும் போலீஸ் பிரிவு முதல்வர் அதிகாரத்தில் இருப்பதை எண்ணிப் பார்த்தால் இது புரியும். இச்சை - ஞானம் - கிரியை எனச் சக்திகள் மூன்று; அயன் - அரி - அரன் எனத் தலைவர் மூவர், இடைகலை - பிங்கலை - சுழுமுனை என உயிர்ப்பு மூன்று; இவ்வாறு உலக இயக்கங்கள் யாவும் மும்மூன்று சக்திகளாக அமைந்திருப்பது போல - இத்தொழிற்சாலையும் மூவரால் இயக்கப்படுவது பொருத்தமேயாகும். உழைப்பில் நம்பிக்கை வைத்து உழைக்கும் இவர்கள் தந்தைநமது ஆதீனத் திருக்கோயில்களில் திறமையாகப் பணியாற்றியவர். நல்ல உள்ளமும் - உழைப்பும் கொண்ட குடும்பத்தில் வளர்ந்த இவர்கள் தொடங்கும் முயற்சி வெற்றி பெற்று ஓங்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

---

தருமையாதீனம்

## ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில்

# கோடி அருச்சனை

தருமையாதீனம் நானூறு ஆண்டு வரலாற்றுச் சிறப்புடையது. இதனைத் தோற்றுவித்தருளியவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இவர் சிவசமாதி கூடி, அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருவுருக்கொண்டு இன்றும் அருள்பாலித்து வருவது தருமபுரத்தில் மேலைக்கோயில் என வழங்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்.

உலக நலங்கருதி, தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம், சுவாமிக்கும் அம்பாளுக்கும் கோடி அருச்சனை நடைபெறுகிறது இன்றுவரை பதினான்கு லக்ஷம் பூர்த்தியாகி, பதினைந்தாவது லக்ஷார்ச்சனை நடைபெற்று வருகிறது. சிவபக்தி, குருபக்தி மிக்க அன்பர்கள் பலர் பங்குகொண்டு வழிபட்டுப் பயன் பெற்று வருகின்றனர். அன்பர்கள் பலரும் பங்குகொண்டு உய்தி பெறுவதற்கு வாய்ப்பாகக் கீழ்க்காணுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**சுவாமி அம்பாள் சகஸ்ரநாமார்ச்சனை இரண்டுக்கும் ரு 10.**

# கேடா வரு நமன்

## நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

சங்கரன்கோவில் கோமதி அம்மனை நோக்கி வரம் கேட்கிறார் ஒரு பக்தர்.

பிறவி என்றும் சாவு என்றும் நாம் சொல்லுவதெல்லாம் நம்முடைய ஆணவ மயக்கத்தில் தோன்றும் தோற்றங்கள்தான். இந்த மயக்கம் தீர்ந்துவிட்டால், பிறவியில்லை, சாவு என்பதும் இல்லை. "மயக்கத்தைத் தீர்த்து வை, தாயே! பித்தத்தைத் தெளியவை, தாயே!" என்றுமுறையிடுகிறார் பக்தர்.

"கேடா வரு நமனைக் கிட்டவாராதே தூரப் போடா..."

என்று நீ உத்தரவிட்டால், அந்த நமன் பஞ்சாய்ப் பறந்துவிடுவானே, தாயே!" என்று சொல்லுகிறார்.

நமன் எப்படி வருகிறானும்? மெல்ல, மெல்ல நம்மை அணுகுகிறான். தலைமயிர் நரைக்கிறது என்றால் என்ன பொருள்? நமன் நமக்கு அச்சாரம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான் என்றுதானே பொருள்! கவிதாகூருக்குக் காதுக்குப் பின்னால் ஒரு நரைமயிர் தோன்றியது. அதைக் கண்ணாடியிலே பார்த்துவிட்டார் அவர். உடனே அவர் சொன்னார்: Death has Placed his visiting card behind my card", "என் காதுக்குப் பின்னால் visiting card - ஐ செருகிவிட்டுப் போயிருக்கிறான் நமன் என்று.

நரைவிழுந்தபிறகு காதுகொஞ்சம் மந்தமாகிறது, கண் மங்குகிறது, பல்லொவ்வொன்றாக விழுகிறது. இப்படியாக மெல்ல மெல்ல, பையப்பைய வருகிறான் நமன். அவன் வரவை எண்ணி அஞ்சுகிறோம். கோமதித்தாயை வணங்கினால், அந்த அச்சம் நீங்கிவிடும்.

"மரணப்ரமாதம் நமக்கில்லை"

என்று அருணகிரி நாதரைப்போல் நாமும் முழங்கலாம். அவளுடைய திருவடிகளை நினைக்க நினைக்க நாம் நம்மை மறக்கிறோம். ஆனந்தம் பிறக்கிறது, மரணபயம் அழிகிறது.

தாயிடத்திலே உரிமையோடு வரம் கேட்கிறார் பக்தர்; அதிகாரத்தோடு கேட்கிறார். அதட்டியே கேட்கிறார் அம்மையல்லவா! அப்பா என்றால்தானே அஞ்சி, அஞ்சிக் கேட்கவேண்டும்.

"கோடா வருநமனைக் கிட்ட வராதே தூரப்
போடா எனஓட்டி பொற்கமலத் தாள்நிழற்கீழ்
வாடா எனஅழைத்து வாழ்வித்தால், அம்ம, உனைக்
கூடா தென்றார் தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே."

'அம்மை நீ, குழந்தை நான்; என்னைக் காப்பாற்ற விரைந்து வரவேண்டாமா நீ? வராமலிருக்கிறாயே, யாரே 'கூடாது' என்று உன்னைத் தடுக்கிறார்கள்?" என்று கேட்கிறார்.

அருமையான பாடல், திருநெல்வேலி அழகிய சொக்கநாத பிள்ளை என்ற கவிஞர்பாடிய பாடல்

'கோடா' என்று துவங்கும் முதல்வரியிலே அச்சம் என்ற பாவம் பேசுகிறது.

'போடா' என்று துவங்கும் இரண்டாவது வரியிலே கோபச் சுவை வெளி வருகிறது.

'வாடா, என்று தொடங்கும் மூன்றாவது வரியில் அருமைப் பாடு என்ற உணர்ச்சி பொங்கித் ததும்புகிறது.

"கூடாதென்றார் தடுப்பார்" என்ற கடைசிவரியிலே, இடித்துக் கூறும் பாவம் மேலிடுகிறது.

நான்குவிதமான உணர்ச்சிகளையும் கவி எப்படி எடுத்துச் சொல்லுகிறது என்பதை மறுபடியும் கவனிப்போம்.

"கோடா வருநமனைக் கிட்ட வராதே, தூரப்
போடா, எனஓட்டி, பொற்கமலத் தாள் நிழற்கீழ்
வாடா என அழைத்து, வாழ்வித்தால், அம்ம! உனைக்
கூடா தென்றார் தடுப்பார், கோமதித்தாய் ஈஸ்வரியே."

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்

## ஸ்ரீ சரபமூர்த்திக்கு

# சரப வேள்வியும் கோடியர்ச்சனையும்



திருச்சிற்றம்பலம்

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினர்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. — அப்பர்

திருச்சிற்றம்பலம்

ஆணவத்தால் தானே பரம்பொருள் என்று செருக்குற்ற இரணியனைத் திருமால் - நரசிங்க வடிவங்கொண்டு அழித்து அவனது குருதியைக் குடித்த காரணத்தால் மதங்கொண்டு உலகிற்குத் துன்பம் விளைத்த பொழுது, அந் நரசிங்கத்தை அடக்குவதற்கு, சிவபெருமான் எடுத்த வடிவமே ஸ்ரீ சரபர் திருவுருவம். இவர் திருபுவனம் திருக்கோயிலில் எழுந்தருளி அருள்

வழங்குகின்றார். இவரை ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபடுவது சிறந்தது. அதிலும் சிறப்பாக அன்று இராகுகால வேளையில் வழிபட்டு அன்பர்கள் பலர் பயன் பெற்று வருகின்றனர்.

ஸ்ரீ சரபமூர்த்தியை நினைப்பவர்களும் வழிபடுபவர்களும் பகைநீக்கம், பாபக்கழிவு, கள்வர், பகைவர், அரசர்களால் ஏற்படும் துன்பம், அகால மரணம், வலிப்புநோய், சுரநோய், எதிர்பாராத விபத்து இவை நீங்கப்பெறுவர். இம்மை மறுமை இன்பங்களை யும் வெற்றியையும் எய்தி இன்புறுவர் என்று சரபகல்பம் கூறுகிறது.

"யஸ்ய ஸ்மரண மாத்ரேண வைரிணும் குலநாசனம்
போக மோக்ஷ பலம் சிரேஷ்டம் புக்தி முக்தி பலப்ரதம்
சர்வ பாப ப்ரசமனம் சர்வ பஸ்மார நாசனம்
ராஜ சோராரி மிருத்யூநாம் நாசனம் ஜயவர்த்தனம்
ஜ்வர ரோகக்னம் ஆபத்க்னம்" — சரபகல்பம்

உலகில் பகையும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கவும் போர்க்குமுறல் அடங்கி அமைதி நிலவவும் இப் பெருமானுக்கு சகஸ்ர நாமார்ச்சனை ரூபமாக 2—9—73ல் லட்சார்ச்சனை தொடங் கப் பெற்றது. அன்பர்களின் ஆர்வத்தாலும் பக்தியாலும் பலரும் பங்குபற்றி வழிபட்டு வருவதாலும் இதைக் கோடி யர்ச்சனையாக நிகழ்த்த, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண்டுள்ளார்கள் என்பது அறியத்தக்கது. இப்பொழுது இவ்வர்ச்சனையில் முதல் லட்சார்ச்சனை நிறைவு பெற்று, இரண்டாவதுலட்சார்ச்சனை நடைபெறுதல் அனைவரும் அறிந்தது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஞாயிறுதோறும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர் கட்கு அருட்பிரசாதம் வழங்கியருள்கின்றார்கள்.

தொடர்ந்து நடைபெறும் லக்ஷார்ச்சனை, சரப வேள்வி ஜபம் முதலியவற்றில் பங்குகொள்ள விரும்பும் அன்பர்கள் ஒருவார காலத்திற்கு முன்னதாகத் தெரிவித்து கலந்துகொண்டு வழி பட்டு உய்வார்களாக.

| | | |
|---|---|---|
| ஸ்ரீ சரப வேள்வி ஜபம் முதலியவற்றிற்குக் கட்டணம் | | ரூ. 250—00 |
| ஏகதின லக்ஷார்ச்சனை 1-க்கு கட்டணம் | .... | ரூ. 500—00 |
| பஞ்சமுகார்ச்சனை 1-க்கு கட்டணம் | .... | ரூ. 50—00 |
| சகஸ்ரநாமார்ச்சனை 1-க்கு கட்டணம் | .... | ரூ. 10—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :-

பொருளாளர்; ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்
திருபுவனம் P. O. தஞ்சை மாவட்டம்.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி
**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

( மலர் 33. இதழ் 3. பக்கம் 151 இன் தொடர்ச்சி )

## நூல்

### உலகாயதன் மதம்

### தோற்றுவாய்

முதற்கண் மிகக் கீழ்ப்படியிலே உள்ள உலகாயதனது மதத்தை (கொள்கையை) அவன் கூறுமாறே கூறுகின்றார். ஏனையமதங்களையும் அவ்வாறே கூறுவார்.

லோக ஆயதம்-லோகாயதம். உலகத்தையே நிலைத்துவாழும் இடமாகக் கொள்ளும் கொள்கை லோகாயத மதம். ஆயதம் - இடம் அல்லது பொருள். இது தமிழில் 'உலகாயதம்' எனப்படுகின்றது. 'உலகாயதம்' என்னும் ஒருமை இன ஒருமை. பின் இவ்வாறு வருவனவும் அவை.

முதற்கண் தோற்றுவாய் கூறுகின்றார்.

### கலிவிருத்தம்

12. இந்திர புரோகிதன் இயம்பும்ஒரு நூலின்
தந்திரம் எனுதருளி னேடருளி லாமல்
சந்தணை புயத்துமண மாலைகள் தயங்க
உந்தியுல கத்தில்உல காயதன் உரைப்பான்.

### இதன் தெளிபொருள்

உலகாயத மதம் தேவ குருவாகிய வியாழன் ஒருகாரணம் பற்றிச் செய்த பொய்ந்நூலின் புணர்ப்பு. பக்குவ முதிர்ச்சியும் இறைவனது திருவருளும் இல்லாதவர் இதனை அறியாமல் அம் மதத்தை 'உண்மை' எனக்கொண்டு, செல்வத்தில் திளைத்தல், மகளிர் இன்பத்திலே மூழ்குதல் என்பவற்றோடே நிறைவுறுவர். அவர்கள் உலகிற்குப் பின்வருமாறு உறுதி உரைப்பர்.

## விளக்கம்

இந்திரன் பக்குவ முதிர்ச்சியாலன்றிச், சூரபதுமன் முதலிய அசுரரால் அரசினை இழந்து அல்லற்பட்டமையால் அவ்வரசினை மீளப்பெற்றவுடன் வெறுப்புணர்ச்சி கொண்டவனாய்த் துறவு பூண்டு தவம்செய்ய நினைத்தபொழுது 'அந்நிலையில் அவன் நில்லாது கெடுவான்' என்பதுபற்றித் தேவகுரு, தவத்தைப் பழித்து மகளிர் இன்பத்தைப்புகழ்ந்து உலகாயத நூலைச் செய்து அதனைக் கேட்பித்து இந்திரனை அவனது நிலையில் நிற்பித்தார். இது கந்தபுராணத்துள் தேவகாண்டத்தின் இறுதிப் பகுதியால் அறியப்படுவது. உலகாயத மதமும் தொன்றுதொட்டே இருந்து வருவதற்குச் சமய நூல்களில் சொல்லப்படும் காரணம் இது. ஆகவே, இவ்வாசிரியரும் இங்கு அவ்வாறே கூறினர். வியாழன் அவ்வாறு செய்த நூலாக ஒன்று இன்று காணப்படாவிடினும், 'அந்நூல் மறைந்துபோக, அதன்வழிப்பரவிய அக்கொள்கையே இன்று உலகில் சிலரால் கொள்ளப்படுகின்றது' என்பதே சமய நூல்களின் மரபு. இங்கு, 'ஒருநூல்' எனப் பெயர் குறியாது கூறப்பட்டமையும் அந்நூல் இல்லாமையை அறிவிக்கும்.

தந்திரம் இங்கு, வஞ்சனை. இதனால், நூல்கள் யாவும் அவற்றைச் செய்தாரது தகுதி அளவானே கொள்ளப்படாது, அது செய்யப்பட்ட காரணமும் அறிந்தே கொள்ளப்படும் என்பது அறியத்தக்கது. இதுபற்றியே, 'நூல்களின் சிறப்புப்பாயிரத்தில் அது செய்யப்பட்டதற்கு உரிய காரணத்தையும் கூறுதல் வேண்டும்' என இலக்கண நூல் விதிக்கின்றது.

"அருள் இலாமல்" எனப் பின்னே வருதலால், "அறிவு" என்றது, அறிவின் பக்குவத்தையே யாம். சந்து அணை புயம் - சந்தனம் பூசியுள்ள தோள்கள். மணமாலைகள் - நறுமணம் கமழும் மலர்மாலைகள். இனி, 'அவ்வப்பொழுதும் புதியராக மகளிரை மணம் செய்துகொள்ளுகின்ற மாலை' என்றலுமாம். உந்தி உலகம் - மகளிரது உந்தி முதலியனவாகிய உலகம். 'கருப்பையாகிய உலகம்' எனவும் உரைப்பர். 'உந்தி உலகத்திலே கிடக்கின்ற உலகாயதன்' என்க. உந்தி கருப்பையாயின் 'பிறவி நீங்காதவன்' என்பது கருத்தாகக்கொள்க. மூன்றும் அடி, அவன் தனது கொள்கையை விடாது கடைப்பிடித்தலையும், நான்காம் அடி, அக்கொள்கையின் இழிபினையும் குறித்த குறிப்பு மொழிகள். (1)

இனி, உலகாயத மதத்தினர் அளவையும், நித்தப் பொருளும், அப் பொருள்களின் சிறப்பியல்பும் கூறுமாறு கூறுகின்றார்.

13. ஈண்டளவை காட்சி; மனமாதி இரு மூன்றாய்
வேண்டும்; அனு மானமுத லானபல வேண்டா;
பூண்டபொருள் பூதம்;அவை புகழ்கடின சீதம்
தீண்டரிய வெம்மைசல னத்திெனாடு சேர்வே.

### இதன் தெளிபொருள்

உலகாயத மதத்தில் கொள்ளப்படும் அளவை காட்சி ஒன்றே. அது மனக் காட்சி முதல் ஆறாக வேண்டப்படும். காட்சிக்குமேலும் 'அனுமானம்' முதலியனவாகக் கூறுவன பலவும் 'அளவைகள்' என வேண்டப்படா; (அவை யெல்லாம் போலி.) அளவையால் அளந்து நித்தமாக அறியப்படும் பொருள் பூதங்களே. அப்பூதங்களில் ஒவ்வொன்றிற்கே உரிய சிறப்புக்குணங்கள் திட்பம், தட்பம், வெப்பம், இயக்கம் என்பன.

### விளக்கம்

ஈண்டு - இவ்விடம்; என்றது தம் மதத்தை. மனக்காட்சி முதலிய ஆறு காட்சிகளாவன, 'மனம்' என்ற ஒன்றோடு ஐம் பொறிகளைக் கூட்டவரும் ஆறனுலும் நிகழும் காட்சிகள். 'ஐம் பொறிகளால் நிகழும் பொதுக்காட்சி, பின் மனத்தால் எண்ணி உணர்ந்த பின்பே உண்மைக் காட்சியாம்' என்பது உலகாயதற்கும் உடன்பாடே. இவ்வறுவகைக் காட்சிகளைப் பிறவாறாகக் கொண்டு உரைத்தல் பொருந்தாமை அறிக. "பூண்ட பொருள்" என்றது, 'அழிவின்றி உள்ளனவாகக் கொள்ளப்பட்ட பொருள்' என்றவாறு.

'அவை சேர்வு கடினம் முதலியன' என்க. புகழ்தல், சிறப்பித்துச் சொல்லப்படுதல். ஒடுவென் எண்ணின் தொகை தொகுத்தலாயிற்று. (2)

இனி, மேல் 'பொருள்' எனப்பட்ட பூதங்களின் பெயரும், பொதுக் குணங்களும், பிறவும் கூறுகின்றார்.

14. சாற்றுபெய ரானவை தலம்புனல் கனற்பின்
காற்றும்என லாம்;இவை கலந்தகுணம் ஓதின்
நாற்றம்இர தம்உருவம் நற்பரிச மாகும்;
போற்றும்இவை நித்தஇயல் பாம்இவை புணர்ப்பே.

### இதன் தெளிபொருள்

மேல், "பூதம்" எனப்பட்ட அவைகட்குச் சொல்லப்படும் பெயர் 'நிலம், நீர், தீ, காற்று' என்பவையாம். (எனவே, மேல் "கடினம்" முதலாகக் கூறிய சிறப்புக் குணங்கள் முறையே இவற்றிற்கு உரியன என்பதாயிற்று.) இனி இவற்றின் பொதுக் குணங்களைச் சொல்லுமிடத்து முறையே, நாற்றம், சுவை, உருவம்,

பரிசம் என வரும். இவையும், மேற்கூறிய கடினம் முதலிய சிறப்புக் குணங்களும் அப்பூதங்கட்கு என்றும் உள்ள இயல்புகளாம்.

## விளக்கம்

காட்சி யளவைக்கு வாராதவற்றை உலகாயதர் பொருளாகக் கொள்ளாமையாலும், ஆகாயம் காட்சிக்கு வாராமையாலும் அவர் "பூதங்கள் நான்கு" என்றே கொள்வர். "பொருளினது இன்மையே ஆகாயம் எனப்படுகின்றது" என்பது அவர் கருத்து. அதனால், 'ஓசையும் காற்றினது பரிச குணத்தின் வேறுபாடே' என்பதும், 'அங்ஙனமாகவே அத்தகைய பரிசத்தையே செவி உணர்கின்றது' என்பதும் அவரது கொள்கைகளாம். நாற்றம் முதலியவற்றுள் பின் பின் சொல்லப்படுவன, முன் முன் சொல்லப் பட்டவற்றிற்கு உரிய பூதங்களிலும் இருத்தலால் அவை 'பொதுக் குணம்' எனப்பட்டன. நாற்றம் நிலம் ஒழிந்தவற்றில் இல்லையாயினும், ஏனையவற்றோடு ஒப்ப, 'பொதுக் குணம்' எனப் பட்டது. கலந்த குணம் - பொதுக் குணம். போற்றும் - அனைவ ராலும் புகழப்படுகின்ற. "இவையிற்றின் புணர்ப்பு" என்பதில் சாரியை, தொகுத்தல். "புணர்ப்பு" என்பதில் பகரவொற்று, விரித்தல். மேல், "சேர்வு" என்றதனை, இங்கு "புணர்ப்பு" என்றார். "போற்றும் இவை, இவையிற்றின் புணர்ப்பு - இரண்டும் பூதங்கட்கு நித்த இயல்பாம்" என்க. (3)

நித்தப் பொருள்களைக் கூறியபின், தோன்றி அழியும் பொருள்கள் தோன்றுமாற்றை அவர் கூறுமாறு கூறுகின்றார்.

15. ஒத்துறு புணர்ச்சியின் உருக்கள்பல ஆகும்
வைத்துறு கடாதிபல மண்ணின்வரு மாபோல்;
புத்திகுணம் நற்பொறி புலன்கள் இவை யெல்லாம்
இத்தின்வரும் நீரினில் எழுங்குமிழி ஒத்தே.

## இதன் தெளிபொருள்

மேற்சொல்லிய பூதங்கள் தம்மில் இயைந்து கூடும் கூட்டத் தினின்றும் பல வகையான உடம்புகள், மண்ணிலிருந்து குடம் முதலாகப் பலவகைப் பாண்டங்கள் தோன்றுதல் போலத் தோன்றும். பின்பு அவ்வுடம்புகளிலே, நீரிலே தோன்றி நிற்கும் குமிழி முதலியன போல, 'புத்தி' எனப்படுகின்ற மனம், சாத்து விகம் முதலாகச் சொல்லப்படுகின்ற குணங்கள், ஐம்பொறிகள், அவற்றில் புலன்களை உணரும் தன்மைகள் ஆகியவை எல்லாம் தோன்றும்.

## விளக்கம்

ஒத்தல் - இசைதல். "நான்கு பூதங்களும் ஒன்றி இயைத லாகிய செய்கையின் விளைவே உடம்பு" என்றும், "அச் செய்கை

வின் வேறுபாடு பல வகையாதலின், அதன் விளைவாகிய உடம்பு களும் பலவகையாகின்றன " என்றும் கூறியவாறு. " கடாதி பல மண்ணின் வருமாபோல் " என்றது, காரணம் ஒருவகையினதே ஆயபொழுதும், காரியம் பல வகையாகத் தோன்றுதல் அளவிற்கு உவமையாகக் கூறப்பட்டது. " புத்தி, அறிவு " எனப்படுவன வும் மனமே என்பதே உலகாயதர் கொள்கை. " புலன் " என்றது புலன்களை உணரும் தன்மையை. " இதனின் " என்பது, " இத்தின் " என மருவிற்று. உடம்பைச் சுட்டி நின்ற " இது " என்பது, பன்மை ஒருமை மயக்கம். " குமிழி " என்றது, நுரை, சுழி முதலியவற்றிற்கு உபலக்கணமாய் நின்றது. (4)

இனி, தோன்றிய பொருள் அழியுமாறும், மெய்யுணர் வாவது இது என்பதும் அவர் கூறுமாறு கூறுகின்றார்.

16. பூதமதின் ஒன்றுபிரி யப்புலன் இறக்கும்;
நீதியினில் நிற்பன நடப்பனவும் முற்போல்
ஓதும்வகை யாகிஉறு காரியம் உலந்தால்
ஆதியவை யாம்;இதனை அறிவதறி வாமே.

## இதன் தெளிபொருள்

'ஒன்றி நின்ற நான்கு பூதங்களின் கூட்டத்தினின்று 'காற்று' என்னும் ஒரு பூதம் நீங்குமாயின், புலன் உணர்வு கெடும். இயங்கமாட்டாது ஓரிடத்தே நிற்பனவும், இயங்குவனவும் ஆகிய இருவகை உடம்புகளும், " உடம்பு " எனச் சொல்லப் படாது முன்போலப் " பூதம் " என்றே சொல்லப்படுமாறு காரிய நிலை கெடுமாயின், காரண நிலையை அடையும். காரியப் பொருள்களின் தோற்றக் கேடுகளை இம்முறைமையவாக உணர் தலே மெய்யுணர்வாகிய ஞானமாகும்.

## விளக்கம்

" பூதம் " என்றது அவற்றின் கூட்டத்தை. ' ஒன்று-காற்று ' என்பது ஆற்றலாற் கொள்ளப்பட்டது. " புலன் இறக் கும் " எனவே, ' அதன்பின், புத்தி, குணம் என்பனவும் இறக்கும் ' என்பதாயிற்று. " நீதியினில் " என்றது, ' தம் தம் தன்மைக்கு ஏற்ற வகையில் ' என்றவாறு. எனவே, " நிற்பன வும், நடப்பனவுமாய் வேறுபடுதல் அவற்றின் இயல்பினாலேயாம் என்பது போந்தது. நிற்பன " தாவரம் " எனவும், நடப்பன " சங்கமம் " எனவும் சொல்லப்படும். " ஆகி " என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. ஆதி - முதல்; காரணம். இதனை - இம் முறையை. (5)

[ தொடரும் ]

# நெஞ்சுக்கு நீதி

நம்மில் பலருக்கு இராக்காலம் வெறுப்பைத் தருகிறது; பலருக்கோ பகல்பொழுது துன்பஞ்செய்கிறது. இரவில் விருப்பம் உடையவர்கள் 'பகலே போய்விடு சீக்கிரம்' என்ருல் பகல் போய்விடுவதில்லை. இரவைப் போ என்ருலும் அதுவும் ஒடிவிடுவதில்லை. ஆனுலும், பகல் பகலாகவேயும் இருந்துவிடுவதில்லை; இரவு இரவாகவும் இருந்துவிடுவதில்லை; தனக்குரிய கால அளவாகிய முப்பது நாழிகை கடந்தால் பகல் விடைபெற்றுக்கொள்கிறது; இரவும் அவ்வாறே மறைகிறது. சிலர் வெறுப்பதால் அவை ஓடிவிடுவதும் இல்லை; விழைவதால் விரைந்து வருவதோ, நீட்டிப்பதோ உண்டா என்ருல் அவையும் இல்லை; தமக்கு என்று ஒரு கால அளவை வைத்துக்கொண்டு அவை இயங்குகின்றன. இது நமக்குப் புரிந்த செய்திதான்.

இந்தத் தெரிந்த செய்தியிலிருந்து மிக ஆழமான தத்துவம் ஒன்றை உலகினர்க்கு வழங்குகின்ருர் நமது தருமையாதீன முதற் குரவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

தீமைகளும், துயரங்களும் தன்னைப் பிடித்துக் கொள்ளுங்கால் மனிதன் அவற்றை வெறுக்கிருன்; நன்மைகளையும் இன்பங்களையும் விரைந்து பெற்று மகிழப் பெரும்பாடு படுகிருன்-ஓடுகிருன்-ஆடுகிருன்; ஆயினும் அவன் நினைத்தது உடனே கைகூடி விடுவதில்லை. அதற்காக அவன் துன்பத்திலேயே கிடந்து விடுவான் என்பதில்லை. இன்பமும் அவனை நாடிவரும். ஆனுல் அது அவன் முயற்சியால் வந்துவிடுவதில்லை. தமக்குரிய கால எல்லை முடிந்தபிறகே பகல் - இரவாகவும், இரவு பகலாகவும் மாற்றமுறுகிறதேயன்றி, மனித விருப்பத்திற்காகவோ, முயற்சிகளினுலோ விரைந்து மாறுவனவல்ல. அதுபோல இன்பத் துன்பங்கள் நம் ஆசைகளையும் முயற்சிகளையும் பொறுத்து அமைவனவல்ல. நாம் செய்திருக்கும் நல்வினை தீவினைகளின் அளவைப்பொறுத்து அவ்வக் காலங்களிலே வந்து கூடுமேயன்றி - நம் இயக்கத்திற்கு ஆட்பட்டதல்ல.

இவ் அருமையான வினைபற்றிய தத்துவத்தை உலகினர்க்கு நன்கு தெரிந்த உவமை வழி விளக்கும் ஆழ்ந்த சிவபோக சாரத் திருப்பாடல் வருமாறு:-

"முப்பதுஞ்சென் ருல்விடியும் முப்பதுஞ்சென் ருலிருளும்
அப்படியே யேதும் அறிநெஞ்சே - எப்போதும்
ஆங்காலம் எவ்வினையும் ஆகும் அதுதொலைந்து
போங்காலம் எவ்வினையும் போம்" — ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

# கடவுண்மா முனிவர் காட்டும் : : : : சிந்தாந்த நுட்பங்கள்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

( மலர் 33, இதழ் 3, பக்கம் 160 இன் தொடர்ச்சி )

குருவருள் ;

" முன்னைவினைப் பெருங்காடு மூடுற வைம்புலவேடர்
துன்னியலைத் திடர்செய்யும் துன்பவழிச் செல்லாமல்
உன்னருநற் சிவஞான உபதேசம் தமிழ்செய்வார்
இன்னவகைத் துளகானம் எய்தியவந் நெறி நீங்கி " (67)

என்ற பாடலின் முன்னிரண்டடிகளில், சிவஞானபோத எட்டாம் நூற்பாச் செய்தி இரத்தினச் சுருக்கமாக உள்ளமை கூர்ந்துணரத் தக்கது. " பழைய இருவினையாகிய பெரிய காடு மூட ஐம்பொறிகளாகிய வேடர்கள் மறைந்து நின்று ஆறலைத்து இடும்பைகளைச் செய்வதே பிறவி நெறி " என்று இப்பாடலின் இரண்டடிகளிற் கூறியுள்ளார் முனிவர்.

" நிலந்தனில் வந்தொரு குருந்த நீழலிலே எவ்வுலகும், கலந்த பொருள் இருந்தபடி " (74) என்று கூறும்பொழுது இறைவன் உயிர்களோடு ஒன்றாய் நிற்கும் நிலை உருக்கத்துடன் விளக்கப்படுகின்றது.

குருந்தடிநீழற் பெருமான் உபதேசப் பகுதி மிக விழுமிய பாடல்களைக் கொண்டது.

" நின்றசிவம் ஒன்றதனைத் தேர்தல் ஞானம்;
நிகழ்போதம் தேர்ந்ததனைத் தெளிதல் " (83)

என்று உபதேசித்த போது மணிவாசகர் " சிந்தை உருகினர் " என்கின்றார் முனிவர்.

திருவாதவூரர்க்குத் தீவிரதர சத்தி பதிந்தமையை,

" உத்தமர் இன்னவாறிங் குரைத்தலும், உவந்து நாலாம்
சத்திநி பாதமெய்தும் தன்மைய ராதலாலே " (84)

என்று பாடுவதால் இனிது விளங்குவதாகும்.

" மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்கள் தத்துவங்கள்
ஐந்துநற் கலைகளென்னும் அறுவகை யகற்றி யந்தச்
சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துடன் அறிவு சேரப்
பந்தனை ஒழிவார் தம்மேல் பரிந்தருட் பார்வை செய்து"(102)

என்ற பாட்டில் அத்துவசுத்தி செய்து சீடர்மேல் அருட்பார்வை புரிந்தமை கூறி, அடுத்த பாடலில், திருவைந்தெழுத்து உபதேசம் செய்தமையைக் குறிக்கின்றார்.

ஐந்தெழுத்தருளிலே :

" எவர்க்குமெய்ஞ் ஞானமாம்அஞ்
செழுத்தையும் உணர்த்த வேண்டி
அவத்தொழில் அகற்றி யாளும்
சிவத்தை முன்னாக மாறித்
தவப் பெருவடிவம் கொண்டார்
தண்டமிழ் பாடும் அன்பர்
செவிப்புலன் வழியே சிந்தை
யுறத்திரு வாய் மலர்ந்தார் " (103)

" அவத்தொழிலை நீக்கி அடிமை கொள்கின்ற சிவ என்பதனை முன்நிற்கும்படி மாறி " என்று வருவது, மணிவாசகர் பெற்ற திருவைந்தெழுத்துபதேச நிலையை இனிது உணர்த்துகின்றது. நகர மகரங்கள் நின்று நீங்கிய இடத்திலே சிகர வகரங்களை முறைமாறி நிற்கச்செய்தல் என்பது பொருள். இருதலை மாணிக்கம் என்பது இது என்பர் சான்றோர்.

திருவருட்பயனில், உமாபதி தேவநாயனர்,

" சிவமுதலே யாமாறு சேருமேல்தீரும்
பவம்;இதுநீ ஓதும்படி "

என்றும், உண்மை விளக்கத்தில் உய்யவந்த தேவ நாயனர்,

" சிவன் அருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்—இவன்நின்று
நம்முதலா ஓதில்அருள் நாடாது நாடும் அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று " (42)

என்றும் கூறிய செய்திகள் திருவைந்தெழுத்தின் அடைவையும் ஓதும் முறையையும் விளக்குவனவாம். அக்கருத்து நுட்பங்களை இங்கு முனிவர் குறிப்பாக ஓதியுள்ளார். "சிவாயநம எனப் பெற்றேன்; நானேயோ தவம் செய்தேன்" என்று தம் உபதேச அநுபவத்தை மாணிக்கவாசகரும் திருவாசகத்துள் குறித் துணர்த்துவது இங்கு நினைக்கத் தக்கதாகும்.

பதிகரணங்களாதல் :

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் நான்கும் பசு ஞானத்தோடு கூடிய வழிப் பசுகரணங்களாகியும், உண்மைச் சிவோகம் பாவனை பற்றி நிகழும் சிவஞானத்தோடு கூடியவழிப் பதிகரணங்களாகியும் நிற்றலை, முனிவர்,

" மன்னுமுன்னுள உயிர்க்கரணங்கள்
மாய்ந்துபொய் முதலறிவிழந்தருளால்
துன்னும் இன்னருள் சிவகரணங்கள்
தோன்றலால் " (105)

என்று பாடுகின்றார்; இவ்விடத்துப் பின்வரும் திருக்களிற்றுப் படியார்த் திருப்பாடற்கருத்து விளங்குதல் காணலாம்.

மணிவாசகர் பரமே தரிசித்தல் :

" களிம்பு தோய்ந்த செம்பென " (111)

என்பது தொடங்கி, " விரிந்த சஞ்சித வினைகள் " (128) என்பது வரை உள்ள பாடல்கள் சித்தாந்த நுட்பங்களின் கருவூலம் என்று கூறத்தக்க பகுதியாக உள்ளன. சரியை, கிரியை, யோகம் ஞானங்கட்கு ஆசிரியர் தரும் விளக்கம் அழகுடையது. குருநாதரிடம் உபதேசம் பெற்ற அடிகளாரது செயல்களை விவரிக்கும் பாடல்கள் ( 126, 127 ) பித்தர், பாலர், பிசாசர் நிலைகளை அடிகளார் நிலையோடு ஒப்பிட்டுரைப்பன.

" பரஞானத்தார் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் "

என்ற அருணந்தி தேவ நாயனார் திருவாக்கிற்கு இலக்கியமாகும் இந்நிலை.

**கோவில் மாண்பு :**

தில்லைத் தலப் பெருமையையும், அங்குப் பொன்னம்பலத்தில் ஆடும் ஐயன் பெருமையையும் எடுத்துரைக்கும் பாட்டுக்களை முனிவர் புத்தரை வாதில் வென்ற சருக்கத்தில் அழகுறப் பாடுகின்றார்.

" நண்ணும் பிறவி யொழித்துயிர்க்கு
நலஞ்சேர் முத்தி கொடுப்பதற்கிங்கு
எண்ணும் சமயக் கடவுளரில்
யானே வல்லன் எனப்பதமேல்
வண்ணந் திகழ்பொற் கழலணிந்து
மதுகைக் கொடியும் கட்டியருட்
பெண்ணாம் பிகைகண் காணநடம்
செய்வா னந்தப் பெருந்தருக்கால் " (425)

**பரத்துவம் :**

பரம்பொருள் பிறந்திறந்து வருவதன்று என்று கூறி மணிவாசகர் புத்த குருவுக்கு உண்மை விளக்கும்போது,

" பேதமாம் யோனிதோறும்
பிறந்தனன் இறைவ னென்றாய்
தீதுசேர் ஒருவர் மாலைத்
தீர்க்க வந்தவர்கள் தாமும்
போதமால் கொள்ளின் அம்மால்
போவதங் குள்ள தாமோ " (466)

என மறுத்ததாகப் பாடுகின்றார். இது பரத்துவம் காட்டும் பகுதி ஆகும்.

" உருவமும் உயிரும் கூடும்
உணர்வுனக் கில்லை இந்த
உருவமிக் கழிந்த காலை
உயிர்கடி தகன்று போகும்
உருவமும் உயிருங் கூடிப்
பிறக்குமேல் இதனால் உன்றன்
உருவமும் உயிரும் வேறாம்
என்றுரை உன்றன்வாயால் " (472)

என்றும்,

"காரணம் நிற்க என்றும்
காரியம் கெடுதல் வீடென்று
ஆரணம் பரவும் எங்கோன்
ஆகமம் புகல்வார் சொல்வார்" (477)

என்றும் கூறிச் சைவ சமய தத்துவங்களை இனிது விளக்கும் பாடல்கள் மறக்க வியலா மாண்புடையவை.

## பேருண்மைகள் :

ஆன்மாக்களுக்கு யோக நிலையை அறிவுறுத்தற் பொருட்டே பெருமான் செபமாலையைத் திருக்கரத்தே கொண்டு வடவால நிழலில் வீற்றிருப்பன்; (487) ஆன்மாக்களது பிறவித் துன்பத்தைப் போக்கிட நீறு பூசிய திருமேனியுடன் எழுந்தருள்வன்; (489) ஆன்மாக்களுக்குப் போகம் ஊட்டித் தொலைத்துப் பக்குவம் வருதற் பொருட்டே உமா தேவியோடு கூடிப் போக வடிவும் இறைவன் ஏற்றான்; (491) என்றெல்லாம் திருவாதவூரர் திருவாக்கில் உள்ள பல்வேறு தத்துவ நுட்பங்களை எடுத்து வைக்கின்றார் கடவுண்மா முனிவர்.

"ஆதிபர மாதிசிவ யோகியரு வாகும்
சோதிவெகு ரூபிசுக வாரிதுய ரில்லா
நீதிமணி மன்றதனில் நிற்குநிலை யல்லால்
யாதுமுடி யாதுபதம் யாரறிவ ரென்றார்" (493)

என்ற சந்தத்திருப்பாட்டு ஆதியும் அந்தமும் அற்ற அரும் பொருளை அழகுற எடுத்துரைப்பதாக உள்ளது.

## எளிமையும் திறனும் :

சுருக்கமாகக் கூறினால் கடவுண்மா முனிவரின் திருவாதவூரடிகள் புராணப் பாட்டுக்கள் நல்ல சந்தப்பாட்டுக்களாக - சாத்திரக்கருத்து நுட்பங்களை எளிமைப்படுத்துவனவாக உள்ளன எனலாம். இவரது கவித்திறனும், பக்திப் பாக்களும் தெய்வத்தமிழ்உலகு மறக்கவியலாதவை.

# பிரதோஷ விரதம்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்

'விரதமாவது மனம், பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளைவிதிப்படிமெய்யன்போடுசிறப்பாக வழிபடுதலாகும்' என்பது ஆறுமுக நாவலரவர்கள் கூறும் விரத விளக்கமாகும். திருக்குறள் உரையில் பரிமேலழகர் விரத மென்பது வினைமாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூயவாதற் பொருட்டு மேற்கொள்ளப்பெறுவது என்றும், இன்ன அறம் செய்வேன், இன்னபாவம் ஒழிவேன் எனவும், தம் ஆற்றலுக் கேற்ப வரையறை செய்துகொண்டு அதனைப் பின்பற்றுவ தாகும் என்றும் கூறுவர். வள்ளுவர், உணவை விடுத்தோ அல்லது சுருக்கியோ நோற்றலைத் திருக்குறளில் "உண்ணாது நோற்பார் பெரியர்" என்று சிறப்பித்துரைப்பார். 'காப்பது விரதம்' என்பது ஆத்திசூடியில் ஔவையருளிய அமுதமொழி. இத்தொடர்க்கு விரதம் காக்கத்தக்கது என்பது பொருள். ஆகவே, நம் உடலையும் உயிரையும் வளர்ப்பதும், நம்மிடமுள்ள பல்வகைக் குற்றங்களையும் நீக்கி நம்மைத் தூய்மைப்படுத்து வதும் நம்மனத்தைக் கடவுட் சிந்தனையில் ஈடுபடுத்தி நலம் விளைப்பதுமாகிய பயன்களைச் செய்வது விரதம் என்று அறி கிறோம்.

### சிவ விரதங்கள் :

சைவ சமய விரதங்களில் சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுவர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கல்யாணசுந்தர விரதம், சூல விரதம், இடபவிரதம், பிரதோஷ விரதம் ஆகிய ஒன்பதும் சிவவிரதம் எனப்படும். இவ்வகை விரதங்களில் பிரதோஷ விரதத்தின் சிறப்பை அறி வோம்.

### பிரதோஷ காலம் :

பிரதோஷம் என்பதற்கு இராக்காலத்தின் முற்பகுதி என் பது பொருள். இதனை வடமொழியில் "இரஜனிமுக வேளை -

அல்லது பாவத்தைப் போக்கும் நேரம்" என்று கூறுவர். பகல் இருபத்தாறேகால் நாழிகைக்கு மேற்பட்ட மூன்றே முக்கால் நாழிகையும் கூடிய ஏழரை நாழிகைப்பொழுது பிரதோஷ காலம். நாடோறும் இக்காலத்தில் சிவதரிசனம் செய்வது மிகச்சிறந்ததாகும். மாதந்தோறும் திரயோதசி திதிகளில் வருகின்ற பிரதோஷகாலம், விரதம் அனுட்டித்தற்குச் சிறந்த காலமாகும். அவற்றுள் கிருஷ்ணபட்சத் திரயோதசி திதியில் வருகின்ற பிரதோஷகாலம் மிகச்சிறந்ததாகும். இக்காலங்களில் மேற்கொள்ளத்தக்க விரதம் பிரதோஷ விரதம் எனப்படும்.

### விரதநாட்களில் :

பொதுவாக விரதம் அநுட்டிப்பவர் விரத தினத்தில் செய்ய வேண்டியவற்றைக் கீழ்க்கண்டவாறு ஆறுமுகநாவலர் அவர்கள் விவரிக்கிறார்.

"காமம், கோபம் முதலிய குற்றங்கள் எல்லாவற்றையும் பற்றறக்களைதல் வேண்டும்; தவறாது வைகறையிலே நித்திரை விட்டு எழுதல் வேண்டும். புண்ணிய தீர்த்தமடைந்து, விபூதி, வில்வத்து அடிமண், தருப்பை, கோமயம், திலம் என்பவைகளைச் சிரசிலே வைத்துக் கையிலே பவித்திரஞ் சேர்த்துச் சங்கற்பம் சொல்லி, ஸ்நானம் செய்தல் வேண்டும். தியானம், செபம், பூசை, ஆலய தரிசனம், பிரதட்சிணம், புராண சிரவணம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும்; அபிஷேகத் திரவியம் நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். போஜனம் பண்ணுமிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும். நித்திரை செய்யுமிடத்து, இரவிலே, கோமயத்தினலே மெழுகப்பட்ட தரையிலே, தருப்பையின் மேலே கடவுளைச் சிந்தித்துக்கொண்டு அதிசுத்தராய் நித்திரைசெய்து வைகறையில் எழுந்துவிடல் வேண்டும். உபவாச விரத தினத்துக்கு முதல் தினத்திலே ஒரு பொழுது அபராணத்திலே (பிற்பகல்) போசனம் செய்தல்வேண்டும். உபவாச (விரத) தினத்துக்குமற்றைநாட்காலையிலேயே நித்திய கருமம் இரண்டும்முடித்துக்கொண்டு, மாகேசுரபூசைசெய்து, ஆறு நாழிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணிய பின், பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங்களைக் கேட்டுக்கொண்டிருத்தல் வேண்டும். நித்திரை செய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகாபாதகத்தை அடைவர்! இவற்றில் எவ்

விதமாயினும் சங்கற்பித்த கால எல்லைவரையும் அநுட்டித்து முடித்தபின், விதிப்படி உத்தியாபனம்(முடிவு) செய்தல்வேண்டும். தொடங்கிய விரதத்தை இடையே விடுவோரும், உத்தியாபனம் செய்யாதோரும் விரத பலத்தை அடையார் "

## பிரதோஷ விரத முறையும் பயனும் :

"பிரதோஷ விரதம் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்கு மாதங்களுள் ஒன்றிலே, சனிப் பிரதோஷ முதலாகத் தொடங்கி அநுட்டித்தல் வேண்டும். பகலிலே போசனஞ் செய்யாது, சூரியன் அஸ்தமிக்க நான்கு நாழிகை உண்டு என்னும் அளவிலே ஸ்நானம் செய்து சிவ பூசை செய்து, திருக்கோயிலிற் சென்று சிவதரிசனம் செய்து கொண்டு பிரதோஷ காலம் கழிந்தபின் சிவனடியாரோடு போசனம் செய்தல் வேண்டும். பிரதோஷ காலத்திலே போசனம், சயனம், ஸ்நானம், விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகனம் ஏறல், மந்திர செபம், நூல் படித்தல் என்னும் இவ்வெட்டும் செய்யலாகாது. பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்துகொண்டுவரின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, (அகால மரணம்) மரண வேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். அஸ்தமனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையே சிவதரிசனத்துக்கு உத்தமகாலம்.

## பிரதோஷ விரத வரலாறு :

முற்காலத்தில் தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடித் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம்பெற முயற்சித்தனர். அன்று தசமி திதி. அவ்வாறெண்ணிய அவர்கள் மறுநாள் ஏகாதசி திதியில் கடல்கடைய முற்பட்டனர். மந்தர மலையை மத்தாக நட்டு, வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றி, இருதரத்தாரும் இருபக்கமிருந்து கடைந்தனர். முதலில் ஆலகாலவிடம் தோன்றியது. விடம் அருகிலிருந்த அனைவரையும் தகிக்கத் தொடங்கியது. திருமால் நீல நிறமானார். அனைவரும் நடுங்கிக் கயிலையை அடைந்து சிவபிரானிடம் சரண்புக்கனர். பெருமான் கருணைகூர்ந்து சுந்தரரை ஏவி அவ் விடத்தைக் கொண்டு வருமாறு பணித்து அதனையுண்டு நீலகண்டராய் அனைவரையும் காத்தருளினர். மீண்டும் கடல்கடையும் முயற்சியை அனைவரும் மேற்கொண்டனர். இலக்குமி, ஐராவதம், காமதேனு, கற்பக விருட்சம், சிந்தாமணி உச்சைச் சிரவம் முதலிய பொருள்கள்

தோன்றின; அவற்றைத் திருமால், இந்திரன் முதலியோர் ஏற்றுக்கொண்டனர். இடைவிடா முயற்சியினுல் மறுநாள் துவாதசி திதியன்று அமுதம் தோன்றியது. அதனைத் தேவர்களனைவரும் பகிர்ந்து உண்டார்கள். மகிழ்ச்சியாக அன்றைய பொழுதினைக் கழித்தார்கள். அமுதம்பெற்ற மகிழ்ச்சியில் ஆலகால விஷத்தை உண்டருளித் தங்களைக் காத்த சிவபெருமானை மறந்து பொழுதுபோக்கியதை நினைந்து பதின்மூன்றும் நாள் திரயோதசி திதியன்று திருக்கயிலைக்குச் சென்று சிவபெருமானைப் பணிந்து பிழைபொறுத்தருள வேண்டினார்கள். கருணைக் கடலாக விளங்கும் இறைவன் மகிழ்ந்து அவர்கட்கு அருள்புரிய எண்ணி அன்றைய திரயோதசி திதியின் மாலைப் பொழுதில் பிரதோஷ வேளையில் தன் திருமுன்னிருந்த இடப தேவரின் இருகொம்புகளுக்கு இடையே நின்று அம்பிகை காணத் திருநடனம் செய்தருளினர். தேவர்கள் அதனைத் தரிசித்து, சிவபெருமானைப் பலவாறு துதித்து வணங்கி நலம் பெற்றார்கள். இந்நிகழ்ச்சியின் பின்னர் திரயோததி திதியின் பிரதோஷ காலம் சிவதரிசனம் செய்தற்கு மிகச்சிறந்த காலமாகப் போற்றப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் தரிசனம் ;**

பிரதோஷ விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் முதல் நாளிரவு உணவுண்ணாது சிற்றுண்டிகள் அருந்தி மறுநாட்காலை எழுந்து நீராடி நித்திய கடன்களை முடித்துக்கொண்டு சிவாலயத்திற்குச் சென்று சிவதரிசனம் செய்து அன்று பகற்பொழுது முழுதும் உணவின்றி இருத்தல் வேண்டும். இறைவன் அருள் நூல்களைச் சிந்தித்தும், கேட்டும் பொழுது கழித்தல் வேண்டும்; மாலையில் சிவாலயம் சென்று சுவாமியம்பாளுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்வித்து வழிபடல்வேண்டும். இக்காலத்தில் நடைபெறும் ஸ்ரீ சந்திரசேகரரின் உலாக்காட்சியிலும் கலந்து கொண்டு வேத சிவாகம திருமுறைப் பாராயணங்கள் செய்தல் வேண்டும். பிரதோஷ தினத்தன்று இடப தேவருக்குச் சிறப்பு வழிபாடுகள் கோயில்களில் செய்விக்கப்பெறும். சுவாமியின் திருமுன்பு இருக்கும் இடப தேவருக்குச் சிறப்பு அபிஷேகம் செய்வித்து அவருக்கு மிக உகந்த அறுகம்புல் மாலையணிவித்து, தேங்காய்த்துருவல், வெல்லங்கலந்த சிவப்பு அரிசி நிவேதனம் செய்வித்து நெய்விளக்கேற்றி வழிபாடு நிகழ்த்துவார்கள். இடபதேவருக்கு இறைவனுக்குச் செய்விக்கப்படும் தூப தீப ஆராதனைகள் முதலியன நிகழ்த்தப் பெறும். அப்போது நந்திதேவரை வழிபட்டு ஆலயத்திலுள்ள

சிவலிங்க மூர்த்தியை இடபதேவரின் இரு கொம்புகட்கிடையே கண்டு பெருமான் திருநடம் புரிந்து அருட்காட்சி வழங்குவ தாகப் பாவித்து வழிபடுதல் வேண்டும். பின்னர்த் தங்கள் வீட்டிற்குச்சென்று தங்களது உடல்நிலைக்கேற்றபடி சிறிதளவு சிற்றுண்டிகள் அருந்தலாம்; இயன்றோர் அன்றையபொழுது முழுதுமே உண்ணா நோன்பிருத்தல் நல்லது.

## சனிப் பிரதோஷம் :

சிவபெருமான் கடலிலெழுந்த நஞ்சையுண்டு, தேவர்கட்கு அமுதம் ஈந்து பிரதோஷ காலத்தில், இடப தேவரின் இரு கொம்புகளுக்கிடையே நடனம் செய்தருளியது, ஒரு சனிக்கிழமை ஆதலின் சனிப்பிரதோஷம் மிகச்சிறந்ததென்று அறிஞர் கூறுவர்.

## சோமசூக்தப் பிரதக்ஷணம் :

பிரதோஷ தினத்தன்று திருகோயிலில் சிவபெருமானை சோமசூக்தப் பிரதட்சணம் செய்து வழிபட வேண்டுமென்பது விதி. கோயிலை வலம்வரத் தொடங்குதற்கு முன்பு இடபதேவ ரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச்சென்று சண்டேசுவர ரைத் தரிசித்துச், சென்றவழியே திரும்பிவந்து மீண்டும் இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச்சென்று வடதிசை யைச் சேர்ந்து, கோமுகையைக் கடவாது முன்சென்ற வழியே திரும்பவந்து இடபதேவரைத் தரிசித்து அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து அங்குநின்றும் திரும்பி இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து அங்குநின்றும் திரும்பிவந்து இடப தேவரைத் தரிசியாது இடமாகச்சென்று சண்டேசுரரைத் தரி சித்துத் திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து அவருடைய இரண்டு கொம்பின் நடுவே பிரணவத்தோடுகூட ஹர ஹர என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும். இவ்வாறு செய்வது சோமசூக்தப்பிரதட்சணம் எனப் படும். பிரதோஷ காலத்தில் இப்படி மூன்றுமுறை பிரதட் சணம் செய்பவர் அநேக அசுவமேத யாகம் செய்த பலனை அடைவர் என்று நூல்கள் கூறுகின்றன. உலகில் உள்ள எல்லா தீர்த்தங்களும் பிரதோஷ சமயத்தில் சிவதரிசனத்தின்பொருட்டு கோவிருஷணத்தை அடைகின்றன. ஆதலின் முசிப்பையும் வாலையும் பிஜத்தையும் தொழுதல் புண்ணியமென்றும் கூறுவர். திருக்கோயிலில் பிரதட்சணம் செய்கின்றவர்கள் பொதுவாக நிறைமாத கர்ப்பிணி எண்ணெய்க் குடத்தைத் தலையில் சுமந்து செல்லும்போது எவ்வளவு மெதுவாகச்செல்வாளோ அவ்வளவு மெதுவாகச் செல்லவேண்டும் என்பதும், ஒரு ஜாமப் பொழுது

பிரதட்சணம் செய்யவேண்டும் என்பதும் நூல்களில் விதிக்கப் படுவன.

நூல்களில் :

சனிப்பிரதோஷச் சிறப்பைப் பிரமோத்தரகாண்டம், பின் வரும் கதை ஒன்றால் தெரிவிக்கிறது.

உஜ்ஜயினி நகரத்தில் சந்திரசேனன் என்ற மன்னவன் மகாகாளேசுவரர் என்ற அந்நகரிலிருக்கும் சிவபெருமானிடம் பக்திகொண்டு விளங்கினன். பிரதோஷ விரதமிருந்து பெருமானைப் பக்திசெய்துவந்தான். மாணிபத்திரர் என்னும் சிவகணநாதர் அம் மன்னனுக்குச் சிந்தாமணி ஒன்றைப் பரிசிலாக வழங்கினர். அம் மணியின் சிறப்பையறிந்த வேற்றரசர்கள் அதனைப் பறிக்க அவன்மீது படையெடுத்தனர். சந்திரசேனன் அஞ்சாதவனாய் ஆலயஞ்சென்று மகாகாளேசுவரரை வழிபட்டுப் பெருமானைத் தியானித்திருந்தான். அதனைக்கண்ட இடையர் குலச் சிறுவன் ஒருவன் தானும் தன் வீட்டிற்கு வந்து கல் மணல் பச்சிலைகளை எடுத்துவைத்துக்கொண்டு இது மாலை, இது சந்தனம், இது இலிங்கம், இது ஆபரணம், இது நிவேதனம் என்று அவைகளைக்கொண்டு சிவபூஜை செய்துகொண்டிருந்தான். அவன் தாய் அதனைக்கண்டு அப்பொருட்களை வெளியில் வீசியெறிந்துவிட்டு அச்சிறுவனையும் தண்டித்து வீடுசென்று உறங்கினள். மூர்ச்சை தெளிந்த சிறுவன் தன்வீடும் தான்பூசித்த பொருட்களும் நவரத்ன மயமாக விளங்கக் கண்டு மகிழ்ந்து சிவபிரானைப் போற்றித் துதித்தான். இச்செய்தி அவ்வூரெங்கும் பரவியது. அரசன் மகிழ்ந்து அவ்விடைச்சிறுவனை தழுவிப் போற்றி உபசரித்தான். இதனை அந்நகரின்மீது படையெடுத்து வந்த மன்னர்களறிந்துசந்திரசேனமன்னனின் பக்திச்சிறப்பைப் பாராட்டி அவன்மீது படையெடுத்துவந்ததற்கு வருந்தி அவனோடு நட்புக்கொண்டு சென்றார்கள். அப்போது இராம தூதராகிய அநுமார் அங்குவந்து அந்த இடைச்சிறுவனை தம் மார்போடு அணைத்துக்கொண்டு, "இச்சிறுவனது எட்டாவது தலைமுறையில் திருமால் இக்குடும்பத்தில் அவதாரம் செய்வார்; நந்தன் என்ற ஆயர்கோன், அவதரிக்கும் கண்ணனை வளர்க்கும் சிறப்பைப் பெறுவான்" என்று சொல்லிச்சென்றார் என்பது பிரமோத்தர கண்டத்தில் வரும் வரலாறு. மேலும் அந்நூலில் பின்வரும் செய்திகள் புலப்படுகின்றன. பிரதோஷ காலம் சிவபிரானுக்கு மிக உகந்தகாலம்; அக்காலத்தில் சிவபிரானையன்றி ஏனைய தெய்வங்களை வழிபடுதல் கூடாது. பிரதோஷ வழிபாடு செய்வோர் மண்ணுலகில் அனைத்தின்பங்களையும் நுகர்ந்து மறுமையில் வீடுபேறடைவார்கள். (தொடரும்)

# துன்பங்களும் துடைக்கும் வழியும்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

( மலர் 33, இதழ் 3. பக்கம் 155 இன் தொடர்ச்சி )

குருவையும் குருபுத்திரர்களையும் சிவனையும் நிந்தை செய்த பேர்கள் மலத்துள் புழுவாய்ப் பிறந்து நீங்காத துன்பத்தை அடைவார்கள். முயலகன் என்னும் நோயால் வருந்திக் கதறுவார்கள்.

எவன் ஒருவன் மகிழ்ச்சியோடு குருவுக்குப் பணிவிடை செய்ய மறுக்கிறானோ, எவன் ஒருவன் குரு சொல்லும் உபதேசங்களைக் கேளாமல் கோணல் புத்தி படைக்கிறானோ, எவன் ஒருவன் குருவுக்குப் பணிவிடை செய்யும் மாணக்கரைக் கலைக்கிறானோ அவன் ஒந்தியாய்ப் பிறப்பான். அவர் கோபிக்கும்போது தானும் கோபிப்பவன் தலைவலியால் வருந்துவான்.

அந்தணரைக் கொன்றவன் சயரோகத்தாலும், கள்குடித்தவன் சொத்தைப் பல்லனும், பொன்னைத் திருடியவன் சொத்தை நிறத்தை உடையவனும் பிறப்பான். குருபத்தினியை விரும்பியவன் குஷ்ட வியாதியால் வருந்துவான். சிவாலயம், மடாலயம் முதலான அறநிலையங்களின்பொருளை அபகரித்தவன் பாம்பாகப் பிறந்து கருடனுக்கும் மனிதனுக்கும் பயந்து காட்டிலே கிடந்து வருந்துவான். திருமால் நிந்தை செய்தவன் ஒந்தியாய்ப் பிறந்து பசிநோயால் பரிதவிப்பான். நாள் விரதம் தவறியவன், இழிந்தோன், கன்மங்களை முறைப்படி செய்யாத பாவி, ருதுவானவள் இவர்களோடு மகிழ்ந்து பேசுபவன் மிக மிகத் தாழ்ந்த பிறவி எய்துவான். ஒத்துக்கொண்டு கொடுக்காதவன் அடுத்த பிறவியில் கருவிலேயே இறப்பான். வலை முதலியவற்றால் பறவைகளைகளையும் விலங்குகளையும் பிடித்துக் கொல்பவன் பிறந்த உடனே இறப்பான். முனிவர்களுக்கு என்று வைத்துள்ள பொருள்களைத் திருடித்தின்பவன் நல்ல யௌவன வயதிலே இறப்பான். தோப்பு, நந்தவனம், ஆறு, குளம் முதலான நீர்நிலைகள் இவற்றை அழிப்பவன் குஷ்டவியாதி பிடித்து அலைவான்.

தெய்வயாகம், பிதுருயாகம், பசுயாகம், மானுடயாகம், பிரமயாகம் எனப்பட்ட ஐந்துவகை யாகங்களையும் செய்யாதவன், அதற்கென்று வைத்தபொருளை உண்டோன், கற்புநெறி தவருத காரிகையை விரும்பியவன் ஆகிய இவர்கள் முள்ளம் பன்றியாய்ப் பிறந்து உழல்வார்கள். தன் சொந்த கோத்திரத்துப் பெண்ணை மணந்தவன் ஊர் நாயாய்ப் பிறந்து வருந்துவான். தருமம் செய்யாமல் அன்னசத்திரம், கோயில் இவற்றின் தருமங்களைச் சரிவரப் பரிபாலிக்காமல் தனக்கொரு பயனைக் கருதியே நடத்துபவன் சண்டாளனுய்ப் பிறந்து அதற்கு அடுத்த பிறவியில் சொரி நாயாய்ப் பிறப்பான். சிவாலயங்களில் நித்திய நைமித்திய பூசைகளைச் சரிவர நடத்துபவர்களே மறுமைப் பயனை அடைவார்கள்.

எவன் ஒருவன் குருவுக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லுகிருனே அவன் மறுமையில் அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயனுய்ப் பிறந்து வருந்துவான். அதை விருப்போடு கேட்டவனும் செவிடனுய்ப் பிறப்பான். தனது ஞானசாரியனைப் பற்றி நல்லவன் கெட்டவன் என விசாரிப்பவன் கண்ணில்லாப் புழுவாய்ப் பிறப்பான். அதற்கு அடுத்த பிறவியில் மூலநோயால்வருந்துவான் அரசன் ஆணையின்வண்ணம் சிவாலய பரிபாலனமும் சிவபூசையும் செய்யாதவன் அலியாய்ப் பிறப்பான். சிவனடியாரை நிந்தித்தவன், வறியனுய்க் கண்ணேயால் கதறுவான். வீட்டுக்கு வந்த விருந்தாளிக்கு உணவளிக்காமல் தான் மட்டும் புசித்தவனும், பிதா, மாதா, பெரியோர்கள், குரு இவர்களுக்கு முன்னே புசித்தவனும் கண்டநோயால் வருந்துவார்கள். அயலான் அன்னத்தைத் திருடிப் புசித்தவன் பசியின்றி நோயால் வருந்துவான்; வாய்ப்புண், கன்னப்புத்து இவற்ருலும் வருந்துவான். நோயால் வருந்தி வந்தவர்களுக்கு உதவி செய்யாதவன் சீர்கெட்டுக் கண்நோக்காடும், காலில் புண்ணும் பொருந்தி வருந்துவான். பிறர்சொத்துக்களைக்கவரும் கள்ளனும் அவனுக்கு உபாயம் சொல்பவனும், உதவி செய்தவனும் முன்போலக் கண்நோயாலும், வயிற்று நோயாலும் வருந்துவான். பல் மனைவியரைப் படைத்தவன் அவர்களைச் சமமாக நடத்தாமல் பட்சபாதங் காட்டுகிறவன் தேகம் நாறி அலியாய்ப் பிறப்பான்.

வெள்ளி, பட்டுப்புடவை, ஆடைவகைகள் இவற்றைத் திருடியவன் வெள்ளைக் குஷ்டத்தாலும், தர்மஸ்தாபனங்களை அழித்தவன் மகோதரத்தாலும், கோள் சொல்பவன் சீ நாறும் நாசியை உடையனுகவும், நயனபார்வை இறைபாஷை இவற்ருல்

சண்டை மூட்டியவன் நாற்ற வாயனுகவும், ஈயம், பித்தளை, சாமரை இவற்றை விற்கத்தகாதவன் விற்ருல் அவன் மலைப்பாம் பாயும் பிறந்து வருந்துவான். கோயிலுக்குச் சொந்தமான ஆலவட்டம், விசிறி இவற்றைத் திருடியவன் எந்நாளும் துன் பத்துக்கு இடமாவான்; வறுமையால் வாடுவான் எதற்கும் தற் பெருமை பேசுகின்றவன் குள்ளனுய்ப் பிறப்பான். ரிஷபத்தில் ஏறுபவன் மூலம், பவித்திரம் இவற்ருல் வருந்துவான் பசுவை வதைப்பவன் பிறவிக்குருடனுய்ப் பிறப்பான். கோணல் மூக்க னுவான்; மூக்குக்குள்ளே கொப்பளம் கிளம்பி வருந்துவான். கற்புடைய மனைவியைவிட்டு கண்டபடி திரிபவன் கண்டகழலை புரையோடி கழுத்தில் சீயொழுக வருந்துவான். ஆட்டான் கொடியை அறுத்தவன், சட்டியிலும், பானையிலும் உண்பவன், வாணியன் அல்லாமல் எண்ணெய் விற்றவன், இவர்கள் அனை வரும் முறையே வேடனுயும், கூலி ஆளாயும், வீணனுயும் யானைப் பாகனுயும் பிறந்து அவதிப்படுவர். சாத்திரத்திலே ஆகாது எனத் தள்ளப்பட்ட ஊனையும் உள்ளிப்பூண்டு முதலான வற்றையும் உண்பவன் கண்ட நோயால் வருந்துவான். புராண இதிகாசங்களில் விருப்பின்றி ஆசிரியன் கட்டாயத்தில் படிப்பவனும், கேட்பவனும், கட்டாயத்திற்காக ஆகம சாஸ்திரங் களைப் படிப்பவனும், அவற்றைத் திருடியவனும் பிறவிக்குருடன் ஆவான். அந்திப்போதிலே வீடுதேடி வந்தவர்களுக்கு இடம் கொடுக்காமல் ஓட்டியவன் மனைவியை இழந்து பரதேசியாய்த் திரிவான். வேதியர் தபோதனர் இவர்களைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செய்யாதவனும், உபசரிக்காதவனும், தேடியபொருள் அனைத்தும் இழந்து வருந்துவான். அதி பாதகம், மகாபாதகம் செய்தவர்கள் நாய் உடலையெடுத்து நலி வுறுவர். பாவமே செய்து பழகியவன் எத்தனைப் பிறவியெடுத் தாலும் பாவங்களே செய்துவருவான். ஆதலால் பாவத்தைப் பாவம் என்று அறிந்து திருவருளாலும் குருவருளாலும் நீக்கிக்கொள்ள முயற்சிப்பவன் அடுத்த அடுத்த பிறவியில் அரனடியாராகப் பிறக்கமுடியும் என்று முருகப்பெருமான் கூறினர். இதைக்கேட்ட அகத்தியர் இறைவனைத் தோத்தரித்து இதுவரை சொர்க்க, நரக, சேஷங்களையே கேட்டுக் கேட்டு அச்சமும் துன்பமும் மனத்தை அலைக்கின்றன. ஆதலால் துன்பம் நீங்கி இன்பம் ஓங்க, சிவஞானயோக இயல்பைக் கூறுக என்று வேண்டிக்கொண்டனர்.

சொர்க்க, நரக, சேஷ இயல் முற்றிற்று.

(தொடரும்)

# பழநியில் பங்குனி உத்தரம்

திரு. என். இராமகிருஷ்ண

கலியுகவரதனுகிய முருகக்கடவுளுடைய தலங்களுள் ஆறு படைவீடுகள் சிறந்தவை. அந்த ஆறுபடை வீடுகளுள் திருவாவினன்குடியாகிய பழநியும் ஒன்று. பழநி ஆண்டவனுடைய பெருமை தமிழ்நாடுமுழுவதும் தெரிந்தது இந்தத் தலத்தில் இக்காலத்திலும் பல அற்புதச்செயல்கள் நிகழ்கின்றன.

முருகவேள் பழநிமலேயின்மேல் ஆண்டிப்பண்டாரமாகத் திருக்கரத்தில் தண்டாயுதத்தை ஏந்திக்கொண்டு மேற்குநோக்கி நிற்கின்ருன். நாரதர் சிவபிரானிடம் ஒருமாங்கனியை அளித்தார். முருகனும் கணபதியும் அது வேண்டுமென விரும்பினர்கள். அப்போது சிவபெருமான் " யார் இப் பூவுலகை முதலில் வலம் வருகின்ருர்களோ அவர்களுக்கு இந்தப் பழம் கிடைக்கும்" என்று அருள்செய்தார். உடனே முருகன் மயிலின்மீது ஏறி உலகை வலம்வரப் புறப்பட்டான். அவன் புறப்பட்ட சிறிது நேரத்தில் கணபதி எழுந்து தன் தாய்தந்தையரை வலம் வந்து வணங்கி, " பழம் தாருங்கள் " என்று கேட்டார்

" நீ உலகை வலம் வரவில்லேயே "! என்று சிவபெருமான் கேட்க," "உங்கள் இருவருக்குள் எல்லாப்புவனங்களும் அடக்கம். நான் பூவுலகை மாத்திரமன்றிச் சகல புவனங்களேயும் உங்களே வலம்வந்தமையால் சுற்றிவந்துவிட்டேன் " என்று கணபதி சொல்லவே, அதை மறுக்க வழியின்றி அவரிடமே பழத்தை இறைவன் அளித்துவிட்டார். (மாதுளம் கனி என்று சிவபுராணங்கள் கூறுகின்றன.)

முருகன் உலகை வேகமாக வலம் வந்து தன் தந்தையாரை வணங்கிப் பழத்தைக் கேட்டான். அதனே முன்பே கணபதி பெற்ற செய்தியையறிந்து கோபம் கொண்டு துறவியைப்போல் கோவண ஆடை, மொட்டைத்தலே, தண்டம் இவற்றுடன் பழநி மலேமேல் ஏறி நின்ருன். சிவபெருமானும் உமாதேவியும் அங்கேசென்று நல்வார்த்தைகளேக்கூறி " நீயே ஞானப் பழமாக இருக்கின்ருய் உனக்கு வேறு பழம் எதற்கு? பழம் நீ " என்று சொல்லிச் சமாதானம் செய்தார்கள். அவர்கள் " பழம்நீ " என்று

சொன்னதினுல் இத்தலத்திற்குப் பழநீ என்பதே பெயராகி அதுவே பழநி எனக் குறுகி நின்றது என்பது புராணவிளக்கம்.

மற்றும் சிலர் வேறுவிதமாகச் சொல்வார்கள். ஆவி என்னும் குலத்தில் உதித்த குறுநில மன்னர்கள் இங்கே வாழ்ந்தார்கள். அதனுல் இதற்கு ஆவினன்குடி என்ற பெயர் வந்தது. அவர்களுக்குரிய இந்த மலைக்குப் பழம் பெயர் பொதினி என்பது. அதுவே பிற்காலத்தில் பழனி என்று மாறியது. ஆவியின் குலத்தை வையாவிக்குலம் என்று சொல்வார்கள். பேகன் என்ற வள்ளல் அந்தக் குலத்தில் உதித்தவன். அவன் பெயரை வையாவிக்கோப்பெரும்பேகன் என்று நூல்களில் காணலாம்.

இத் தலத்திற்கு வையாபுரி, வைகாவூர் என்று பழங்காலத்தில் பெயர்கள் வழங்கின. இதனைத் தலைநகராகக் கொண்ட நாட்டுக்கு வைகாவூர்நாடு என்று பெயர். இதனை ' நாதவிந்துகலாதீ நமோ நம" என்ற திருப்புகழில் " ஆதியந்த வுலாவாசு பாடிய சேரர் கொங்குவை காவூர் நனடதில் ஆவினன்குடிவாழ்வான தேவர்கள் பெருமாளே" என்று அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

இங்கே தினந்தோறும் முருகனுக்கு நடக்கும் பால் அபிஷேகத்துக்கும், பஞ்சாமிர்த அபிஷேகத்திற்கும் கணக்கு வழக்கே இல்லை. விழாக்காலங்களில் பலவகையான காவடிகளைச் சுமந்து கொண்டு அன்பர்கள் வருவார்கள்.

பங்குனி உத்தரத்தில் இங்கே திருத்தேர்விழா நடைபெறுகின்றது. பக்தர்கள் கூட்டம் கூட்டமாக மலையை வலம்வருவதும் "அரோகரா அரோகரா" என்று வானை முட்டும்படி ஆரவாரம் செய்வதும் பக்தியினுல் உருகி ஆவேசம் வந்து குதிப்பதும் தண்டாயுதபாணிமுன் தங்கள் குறைகளை முறையிடுவதும் காண்பவர்கள் தம்மை அறியாமலே உருகிப்போவார்கள்.

மலையின்மேல் ஏறுவதற்கு வசதியான படிக்கட்டுகள் அமைந்திருக்கின்றன. அங்கே உள்ள குரங்குகளிடம் மாத்திரம் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏமாந்தவர்கள் தங்கள் கையில் உள்ள பொருள்களைப் பறிகொடுத்துவிட்டு நிற்க வேண்டியதுதான்.

இடும்பன் என்னும் அசுரன் பழநியாண்டவனுடைய பக்தன். அவன் இரண்டுமலைகளைக் காவடிபோல் கட்டிக்கொண்டு வந்தான். அவை சிவகிரி, சக்திகிரி என்பவை. சிவகிரியே பிற்காலத்தில் பழநிமலை ஆயிற்று. இடும்பன்மலை என்ற பெயரில் மற்ருெரு மலையும் அங்கு இருக்கிறது. இடும்பன் காவடி தூக்கியதை எண்ணியே இக்காலத்தில் பக்தர்கள் காவடி எடுக்கின்ருர்கள்.

மலையின்கீழே பழங்கோயில் ஒன்று உளது. அதைத் திருவா வினன்குடி என்று வழங்குகின்றூர்கள். அங்கே கோவிலுக் கருகில் '' சரவணப்பொய்கை " என்ற தீர்த்தம் ஒன்று கிணருக இருக்கிறது.

வையாபுரி என்ற பெரியகுளம் ஒன்று இங்கே இருக்கின்றது. மழை நன்ருகப் பெய்தால் இந்தக்குளம் நிரப்பிக் கடல் போல் விளங்கும். இங்கிருந்து இரண்டுமைல் தூரத்தில் சண்முகநதி என்ற சிற்ருறு ஓடுகிறது.

பழநி சம்பந்தமான புராணம் ஒன்றும் சில சிறிய பிரபந்தங் களும் இருக்கின்றன. இங்கே இருந்த மாம்பழக்கவிச்சிங்கநாவ லரென்னும் புலவர் தண்டாயுதபாணி வடிவமாகப் பல கிர்த்தனங் களையும் செய்யுட்களையும் இயற்றியிருக்கின்ருர். அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ்ப் பாக்கள் பல உண்டு. ''அதிசயம் அநேகம் உற்ற பழநிமலை" என்று அவர் போற்றுகிருர். இன்றும் பழநி ஆண்டவன் சந்நிதியில் அதி சயங்கள் பல நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன

திரு - இலக்குமி! ஆ - காமதேனு, இனன் - சூரியன், கு - பூமி டி - நெருப்பு. இவை வழிப்பட்டமையால் திருவாவினன்குடி என்ற பெயர் ஏற்பட்டது.

பழநியில் யாத்ரீகர்களுக்குப் பலவசதிகள்செய்யப்பட்டுள்ளன பலவிடுதிகள் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன. பழநியில் இழுவை ரயிலும் உண்டு. மலை ஏற முடியாதவர்கள் சுலபமாக மேலே சென்று ஆண்டவனைத் தரிசிக்கலாம்.

பழநியில் நிகழும் முக்கியமான விழாக்கள் சித்திரை உற்சவம், அக்கினி நக்ஷத்திர விழா; வைகாசி விசாகம், தைப்பூச விழா, கந்தர்சஷ்டி விழா, கார்த்திகை விழா, பங்குனிப் பெருவிழா முதலியன. கேரளத்திலிருந்து ஏராளமான பக்தர்கள் இங்கு வருகின்றூர்கள். தேவஸ்தானம் பல கலைவளர்ச்சி நிலையங்களை நடத்திவருகின்றது; பல கல்லூரிகள் உள்ளன. பழநியில் தங்க விமானமும் தங்கரதமும் சிறப்பானவை. இரவில் பழநி மலை மின் விளக்குக்காட்சி பலமைல் தூரத்திற்குத் தெரியும். பக்தர்கள் கிரி பிரதக்ஷிணம் செய்வதை முக்கியமாகக் கருதுவர். கிரியை வலம் வர சுமார் ஒருமைல் நீளம் இருக்கலாம். போகர் என்ற சித்தர் வாழ்ந்த இடம் பழநி. பழநியில் 32 கோவில்கள் உள்ளன.

# கடவுளைக் காண....

கடற்கரையில் அமர்ந்தபடி கடவுளைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார் ஒருவர். அப்போது ஒரு சித்திரக் குள்ளன், கிளிஞ்சலால் கடல் நீரை முகந்துவந்து கரையில் குழிதோண்டி அதில் விட்டுக்கொண்டிருந்தான். ஆராய்ச்சியாளரின் கவனம் அவன்பக்கம் திரும்பிவிட்டது.

"என்னப்பா செய்கிறாய் நீ?"

"சும்மா இருங்கள், என்வேலையைக் கெடுக்காதீர்கள்!" என்ற அந்தக் குள்ளன் மேலும் வேகமாக ஓடி ஓடிக் கடல் நீரைக் கிளிஞ்சலால் கரையில் கொண்டுவந்து விட்டுக் கொண்டிருந்தான்.

ஆராய்ச்சியாளருக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை. குள்ளனை நிறுத்தினார்.

"சொல், ஏன் இப்படிச் செய்கிறாய்?"

"இந்த உலகத்தில் ஏழையே இல்லை என்ற நிலையை உருவாக்கப்போகிறேன். அதனால் நான் இப்படி..."

"அது எப்படி?"

"இந்தக் கடலில்தானே முத்து, பவளம் எல்லாம் கிடைக்கிறது? இப்போது இறைத்து இறைத்துக் கடலை வற்றச்செய்துவிட்டால், அதற்குள் நிறைய முத்தும், பவளமும் இருக்கும். அதை மக்கள் அனைவரும் வந்து எடுத்துக் கொள்ளலாம்."

"அடபைத்தியக்காரா!" ஆராய்ச்சியாளர் சிரித்தார். "கடலை வற்றச்செய்ய முடியுமா?"

"அட புத்திசாலி!" — குள்ளன் சிரித்தான்.

"உன் சின்ன மூளையால் கடவுளை நீ ஆராய்ந்து முடிப்பதற்குள், நான் என் வேலையை முடித்துவிடுவேன்."

ஆராய்ச்சியாளர் திகைத்து நிற்க, குள்ளன் மாயமாய் மறைந்துபோனான்.

— வாரியார்.

நன்றி. —தினமணி கதிர், 8-2-74.

# செய்திகள்

## தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி
## ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழக ஆண்டுவிழா
## விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசிதுணைக் கொண்டு தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞான சம்பந்தர் மாணவர்கழக ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டி களின் பரிசளிப்பு விழாவும் 4—3—74 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி யளவில் நிகழ்வுற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் Dr திரு. வ. சுப. மாணிக்கம் எம். ஏ , பி. எச்டி. அவர்கள் தலைமையேற்றுத் "தொல்காப்பியப் பொருள் நலம்" என்ற தலைப்பில் பேருரையாற்றி கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற் றவர்களுக்குப் பரிசுகள் அளித்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரை யாளர் திரு செ. வைத்தியலிங்கம் எம். ஏ., எம். லிட். அவர்கள் "கலையும் காவியமும்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும், உள்ளூர்ப் பெருமக்களும் விழாவிற்கு வந்திருந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

## மாயூரம் - வள்ளலார் கோயிலில் குருப்பெயர்ச்சி விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார் கோயிலில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு 8—2—74 வெள்ளிக் கிழமையன்று குருப்பெயர்ச்சியை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். அன்பர்கள் பலர் வந்து தரிசித்துப் பேறுபெற்றனர்.

## திருக்குவளையில் நெல் மகோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமிதேவஸ்தானத்தில் நெல்மகோற்சவம் 5—3—74முதல் 9—3—74வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க்கிழார் தந்தருளிய நெல்மலையைச் சுவாமிகள் ஆரூருக்கு அட்டித்தருமாறு ஆளிட வேண்டிக் கொண்டபடி, இறைவர் ஆணையால்பூதங்கள் எடுத்துச்சென்றது முதலிய எல்லா வைபவங்களும் பக்த உற்சவமாகச் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் தரிசித்து மகிழ்ந்தனர்.

இவ்விழாவினை யொட்டித் தேவஸ்தானப் பிரசங்க சபா மண்டபத்தில் மாலை 6 மணிக்குச் சொற்பொழிவுகளும் தேவார பாராயணமும் நடைபெற்றன. 7—3—74 வியாழனன்று திருவாரூர் உயர்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன் அவர்கள் 'சம்பந்தரும் கோளிலியும்' என்ற தலைப்பிலும் 8—3—74 வெள்ளியன்று திருவாரூர் வித்துவான் திரு. மு. இரத்தினதேசிகர் அவர்கள் 'சப்தவிடங்கத்தலங்கள்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றிய பின்னர், திருவாரூர் திரு. சாம்பசிவ முதலியார் பி. ஏ., பி. டி. அவர்கள் 'சுந்தரர்' பற்றி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர். விழாவிற்கு வந்து தரிசித்தும், சொற்பொழிவுகளைக் கேட்டும் அன்பர் பலர் பயன் பெற்றனர்.

## சென்னை சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா

தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில், திருத்தணி தேவஸ்தான அறங்காவலர் குழுத் தலைவர் புலவர். திரு. மி. ச. நடேசன் அவர்கள் தலைமையில் 2—2—74 அன்று வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. வேலூர்த் தேவாரம், திருப்புகழ் நாமாவளிப் பாராயணம் நடைபெற்றது. திரு. V. M. ஆறுமுகம் அவர்கள் நன்றியுரை கூறினர். விழா முடிவில் வந்திருந்த அன்பர்களுக்குச் சந்தனக்குழம்பு, விபூதி பிரசாதம் வழங்கப் பெற்றது. அன்பர்கள் அணிந்து பயன்பெற்றனர்.

## சிவராத்திரி விழாவும் திருவாசக வகுப்புத் தொடக்க விழாவும்

சென்னை சமயப்பிரசார நிலையத்தில் விவேகானந்தர் கல்லூரித் துணைப்பேராசிரியர் திரு. ந. இராமன் M. A., அவர்கள்

தலைமையில் 20—2—74 அன்று சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. 'கண்ணப்பர்' என்ற தலைப்பில் திரு. தெ ஞானசுந்தரம் M. A., அவர்களும் 'சிவராத்திரிச் சிறப்பு' என்ற தலைப்பில் திரு. N. சங்கரநாராயணன் அவர்களும் விரிவுரையாற்றினர்.

அடுத்துத் திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. அவர்களால் 'திருவாசகவகுப்பு' தொடங்கப்பெற்றது. பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறி கூட்டத்தை உடனிருந்து நிகழ்த்தினர்கள்.

நகரப்பெருமக்கள் பலரும்வந்திருந்து கேட்டுப்பயனுற்றனர்;

## மதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை சமயப்பிரசார நிலைய அன்பர்களின் மதாந்தர சமயப்பிரசார வழிபாட்டுக் கூட்டம் 24—2—74 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீ காரணீசுவரர் கோயிலில் நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சார்பில் ஸ்ரீ சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேகம் செய்விக்கப்பெற்றது. வழிபாட்டின் பின் கோயில் சமயப்பிரசார மேடையில், பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாணம், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் "அடியார் பெருமை" என்ற தலைப்பில் நிலைய அன்பர் திரு. N. இராமமூர்த்தி அய்யர் குழுவினரின் தக்க பக்க வாத்தியங்களுடன் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது. திருமுறைப் பாராயணமும் நிகழ்வுற்றது. அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### தருமையாதீனம்

### மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில்

## திருவெம்பாவை நிறைவு விழா

மதுரை, தருமபுர ஆதீன ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் திருவெம்பாவை நிறைவு விழா 20—1—74 அன்று 7 மணியளவில் முன்னாள் மதுரை மாவட்ட உணவுப் பொருள் வழங்கு துறை அதிகாரி கவிமணி திரு. அ. சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்தது. எஸ். எஸ். கபே அதிபர் திரு. எஸ். எஸ். கிட்டப்பா தொடக்கவுரையாற்றினர். சிவத்திரு. ம. க. சுந்தரேச பட்டர் பாராட்டுரையும் வாழ்த்துரையும் வழங்கினர். மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் நிர்வாக அதிகாரியும், உதவி ஆணையருமான திரு. என். எஸ். இராமச்சந்திரன் திருமடத்துப் பள்ளி மாணவர்களைப் பாராட்டிப் பேசி மாணவ

மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர். பேராசிரியர் புலவர். இறைக்குருவனாரும், சித்தாந்த வித்தகர் திரு. தி. சு. கோவிந்த சாமியும், திருவெம்பாவையின் இலக்கிய நயம், திருவெம்பாவையின் தத்துவச் சிறப்புப் பற்றி முறையே சொற்பொழிவாற்றினர். வித்துவான். திரு. தா. குருசாமி தேசிகர் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் வரவேற்பும் நன்றியும் கூறினர். திரு மடத்து மாணுக்கர்களால் தொடக்கத்தில் திருமுறைப் பாராயணம் செய்யப்பட்டது. மங்கல வாழ்த்தோடு விழா இனிது நிறைவுற்றது.

## குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம்

11—1—74 அன்று குத்தாலத்தில் தருமையாதீனம் ஸ்ரீ உக்த வேதீசுரர் ஆலயத்தில் "திருப்பாவை – திருவெம்பாவை மாநாடு" நடைபெற்றது. குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினர் தமது 48-ஆவது வார வழிபாட்டினை நடத்தியபின், அன்பர்கள் யாவரும் மாநாட்டுப் பந்தலில் கூடினர். தருமையாதீன முதுபெரும்புலவர் திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. K. சுந்தரமூர்த்தி, M. A., அவர்களும் திருப்பாவை – திருவெம்பாவை குறித்து அரிய சொற்பொழிவாற்றினர்கள். வார வழிபாட்டுக் கழகச் செயலர் திரு. சி. கோவிந்தராஜுலு நன்றி நவின்றுர்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

Visited the temple with family on 23rd July 1973. The service rendered by the staff is excellent and very courteous. The temple is maintained in a very good state of cleanliness which is a matter of great tribute to all concerned. Such a maintenance really tempts the devotees to call again and again.

(Sd.) S. G. Padmanabkan.
Madras.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

( பிரமாதீசஸூ பங்குனிமீ 1௳ முதல் 30௳ முடிய )

( 14—3—74 முதல் 13—4—74 முடிய )

பிரமாதீசவருடம் பங்குனிமாதம் 1 ஆம்தேதி வியாழக்கிழமை உதயாதி 19-1 நாழிகைக்கு கடக லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷக ரான ஸ்ரீ சூரியபகவான் மீனராசி பிரவேசம் செய்கிறார்.

அதனுடைய பலன் உலகெங்கும் சுபிக்ஷமும் சௌக்யமும் தனதான்ய விருத்தியும் ஏற்பட்டு, பிரஜைகள் தேவதாகுருபக்தி யும் ஏற்பட்டு சௌக்யம் அடைவார்கள்.

குறிப்பு :- மேற்படி பிரவேச கால லக்னத்தில் ராகு கால ஆரம்பமும் பகல் வேளையும் முன்யாமமும் அஷ்டமராசி யில் குரு புதன் இவர்கள் சேர்க்கையும் லக்னாதிபதி சந்திரன் நீச ராசியில் ராகுவோடு சம்பந்தமும் ஏற்பட்டு இருப்பதானது எதிர்காலத்திற்கு சூசனையாகத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதனுடைய பலனைப்பற்றி அதிகம் எழுதுவதற்கில்லை. உலகெங் கும் சமஸ்த மங்களமும் உண்டாகும்படி சகல பிரஜைகளும் ஸ்ரீ பகவானை, பிரார்த்திப்போமாக. கடவுள் காப்பார். சுபம் உண்டாகும்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். தன தான்ய விருத்தி ஏற்படும். எதிர்பாராத சில லாபங்கள் கிடைக் கும் ஜீவனம் ஓங்கும். உலகப் பிரசித்தி ஏற்படும். நினைத்த காரியம் நடக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். வரவு செலவுசமமாகும். அதிகமான அலைச்சல்களும் சொற்ப நஷ்டமும் ஏற்படும். வைத்தியச்செலவு ஏற்படும். செய்காரியங்கள் கொஞ்சம் தாமதப்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிகமான அலைச்சல்கள் ஏற்படும். குடும்பத்தில் செலவு அதிகமாகும். ஜீவனத்தில் சில மாறுதல்கள் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும் வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். எதிர்பார்த்த காரியங்கள் கொஞ்சம்தாமதத்தோடு நடக்கும். வைத்தியச் செலவு அதிகமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப்பலனைத்தரும். வெகுகாலமாக நடைபெறாத சில காரியங்கள் தானாகவே நடக்கும். தனதான்ய விருத்தி ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். வெள்ளி சனி சுபமாகும்

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அனுவசியமான அலைச்சல்களும் மனக்குழப்பமும் ஏற்படும். வரவுக்கும் அதிகமான செலவுகள் ஏற்படும். ஜீவனத்தில் சில மாறுதல்கள் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்பத் தொல்லை அதிகமாகும். எதிர்பார்த்த காரியங்கள் கொஞ்சம் தாமதத்தோடுதான் நடக்கும் அதிகமான அலைச்சல்கள் உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமிருக்காது. வீண் அலைச்சல்கள் ஏற்படும். வைத்தியச் செலவு அதிகமாக இருந்துகொண்டு

இருக்கும். நினைத்தபடி எந்தக் காரியமும் நடக்காது. குடும்பத் தொல்லை அதிகமாக இருந்துகொண்டு இருக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமிருக்காது. நண்பர்களாலும் உறவினர்களாலும் சிரமம் ஏற்படும். ஆரோக்யம் குறைந்து காட்டும். விரோதம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் சேரும். தன தான்யம் விருத்தியாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். எதிர் பாராத சில நன்மைகள் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுப மாகும்.

### 11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி-¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாகும். ஜீவனத்தில் சிலமாறுதல் ஏற்படும். வைத்தியச் செலவு ஏற்படும். அலைச்சல்கள் அதிகமாக இருந்துகொண்டு இருக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

### 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அடிக்கடி சஞ்சாரங்கள் ஏற்படும். படிப்பு விருத்தியாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகல காரியங்களும் சாத்தியமாகும். எதிர்பார்த்த காரியங்கள் கொஞ்சம் தாமதமாக நடக்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தெய்வ பலத்தால் சகலமும் சாத்தியமாகும். சுபம்.

**கடிதம் :**

அர. பொன்னுசாமி, கோயமுத்தூர்-6
3/256, சிவானந்தபுரம். 15—1—1974

சீகாழிப்பதியில், திருநிலைநாயகி அம்மன் சந்நிதியில், தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருக்கரத்தால், திருவருட் பிரசாதம் 29—12-'73ல் பெற்றதன் பயனாக, இவ்வாண்டு முதல் ஞானசம்பந்தம் சந்தாதாரராகும் வாய்ப்பமைந்ததற்கு இறையருளினை இறைஞ்சுகின்றேன்.

சைவ சித்தாந்த மகாசமாஜ ஆண்டு விழாவில் சந்நிதானம் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரையாயமைந்த ஆசியுரை, மடை திறந்தனைய பெருக்கெடுத்த நிலையானது எம் உள்ளத்தினை ஈர்த்தது. இறையருளை எண்ணி உவக்கின்றேன். அன்பும், வணக்கமும்.

அடியார்க்கடியேன்,
அர. பொன்னுசாமி.

* * * *

M. கருப்பண்ணன், கரூர்.
B-30, லட்சுமிபுரம். 29—12...73.

தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு அடியேன் கருப்பண்ணன் வணக்கத்துடன் எழுதிக்கொண்டது. இப்பவும் தாங்கள் வெளியிட்டு வரும் "ஞானசம்பந்தம்" புத்தகங்களைப் படித்துவருகிறேன். மேற்படிபுத்தகத்தில் பக்திப்பரவசமூட்டும் வகையில் மிக நல்ல முறையிலும் "ஞானசம்பந்தம்" புத்தகம் வெளியிட்டு வருவதால் அடியேன் தங்களின் சந்தாதாரர்களில் ஒருவராகச் சேர விருப்பம் கொண்டு தங்கள் திருமுன்பிற்கு வருட சந்தாவாக ரூ. 5—00 அனுப்பி இருக்கிறேன். அடியேனுக்குச் சந்தாப் புத்தகங்களை (ஞானசம்பந்தம்) அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டு, இந்த இதழைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.